Free Circulation Germany- England

மணி: 70 - ஓசை: 292 தை. January. 2021

# வெற்றிமணி

Vettimaniy

ESTD 1950

Successful Publishing 26 years IN EUROPE

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்.B.F.A

Orientalisch
Textilien & Schmuck
30 ஆவது ஆண்டு நிறைவு
தொடர் மலிவு விற்பனை
Königswall 16 (Am Hbf) 44137 Dortmund
Tel:0231 162377



## எல்லாம் பயமயம்!



Dr.IN

## எத்தனை கோடி இன்பம் வைத்தாய்

## அரசியல் களம்

கொழும்பிலிருந்து ஆர்.பாரதி

எங்கள் இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துக்கள்

தமிழர் இல்லம் எங்கும் ஒலிக்கட்டும் வெற்றிமணி

# நான் வில்லனாக இருந்த கணப்பொழுது



கடைக்குப்போய்த் தொட்டுப்பார்த்த பின் பொருளைத் திருப்பிப் பார்த்து [விலையை] பொருளை எடுத்துக்கொண்டு கவுண்டரில் வரிசையில் நின்று, முன்னுக்கு இன்னும் ஒருவர் மட்டும்தான் நிற்கும்போது மனம் சட்டென மாறி, இது இந்த விலைக்கு சரியில்லை என்று எடுத்த பொருளை திருப்பி வைத்து விட்டு வரும் காலம் மலை ஏறிப்போச்சு. [திருப்பி வைத்து விட்டு என்றால் எடுத்த இடத்தில் என்று எண்ணவேண்டாம்.வீட்டிலேயே எடுத்த பொருளை எடுத்த இடத்தில் வைப்பதில்லை கடையில்!

லொக்டவுண் காலம். ஒன்லைன் சொப்பிங்கிற்கும் ஒரே கொண்டாட்டம். ஒரு கொம்பியூட்டர் மேசை ஒன்று ஓடர் பண்ணி இன்று வரும் என்று காத்திருந்தேன். இப்ப எல்லாம் பார்சல் கொண்டு வருபவர்கள் ஒருக்கால் மணி அடிப்பார்களாம் இல்லை என்றால் துண்டு ஒன்று கடிதப்பெட்டிக்குள் போட்டுவிட்டு போய்விடுவார்களாம் பின் நாம் அவர்கள் சொன்ன இடத்தில் போய் எடுக்க வேண்டுமாம்.

இப்படி பாசல் சேவீஸ் பற்றி ஒரு முன்னுரை எனக்குக் காலையில் தொலைபேசி மூலம் தந்துவிட்டு மகன் வேலைக்குப் போயிட்டான்.

மணி அடித்தது அவசரமாக ஓடிப்போய்த் திறந்தேன். அது பேரன். பாடசாலை இன்று 12 மணிக்கு முடிந்துவிட்டது என்று வந்து அம்மம்மா ரீ தாருங்கோ என்று ஆசையாக வாங்கிக் குடித்தான். சோறு சாப்பிடேன்டா என்று கேட்க சோறு சாப்பிட்டால் வளர ஏலாது என்றுபோட்டுப் போகிறான். நான் பிறந்த நாள் தொடக்கம் சோறுதானே சாப்பிடுறேன். என்ரை உயரத்தைப் பார்க்கிறேன். கட்டை என்று சொல்லமுடியாது. நான் உயரம் என்று தங்கச்சி என்னைக் கொக்கத்தடி என்று கூப்பிட்டதாகவும் ஞாபகம்.



● மாதவி

பேரன் உயரம் தான் ஆனால் முறிஞ்சுபோவான் போல் மெல்லிய உடம்பு. போகிற பேரனைக் கூப்பிட்டு அம்மா ஆட்டா மா இல்லை என்றவடா! காரில்தானே வந்தனீங்கள் கொண்டுபோய்க் குடுங்கோ என்று பேரனிடம் பேத்தி குடுத்தா. நான் அவனுக்கு உதுபாரம் என்று ஒரு முறைப்புப் பார்வை பார்த்துவிட்டு அந்த 2 கிலோ ஆட்டா மாவை காரில் ஏற்றிவிட்டுத்திரும்பினேன்.

கதிரையில் வந்து சும்மா வட்சப்பை நோண்டுவோம் என்று பார்க்க மீண்டும் பெல் அடிச்சுக் கேட்கிறது. பார்த்தால் பார்சல் வான்தான் வந்திருக்கு. வாசலில் எட்டி நின்று பார்க்கிறேன். பார்சல் கொண்டு வந்த பெடியன் பார்சலை இறக்கிறான். வாசலுக்கை கொஞ்சம் மறைஞ்சுதான் நிற்கிறேன். கிட்டப்போனால் அதில் வைத்தே மேசையைத் தந்து விட்டுப் போடுவான். வயது போனால் மூளை வேலை செய்யாது என்று சொல்வார்கள் ஆனால் எனக்கு இப்படிக் குறுக்கு மூளை அடிக்கடி பாவிப்பதால் மூளை நல்ல தெளிவாகவே இருக்கு. பாசல்காரர்களை நம்பமுடியாது. சோம்பேறிப் பசங்கள்.

பாசல்காரப் பையன் மெல்லிய பெடியன். அவன் வெள்ளைக்காரப் பெடியன். அவனும் சோறு சாப்பிடுவதில்லைத்தானே. அந்த மேசையை மலையைத் தூக்குவது போல் மூச்சு வாங்கக் கொண்டு

27 ஆம் பக்கம் பார்க்க...








வாடிக்கையாளர்களுக்கு எமது இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துக்கள்

RKL IMMO .de IMMOBILIEN & BAUFINANZIERUNG



EU-VAT/Umsatzsteuer ID.-Nr.DE186406298 | Berufserlaubnis erteilt am 08.01.2002| Registrierungsnummer: D-W-133-ADSJ-30

Sinnadurai Kiritharan | Tel. 0511-5307 4208 | www.rklimmo.de | Email. info@rklimmo.de



Büro Anschrift/ எமது அலுவலக முகவரி
RKLIMMO, Sinnadurai KIRITHARAN
Vahrenwalder Str. 167, 30165 Hannover.

Öffnungszeiten/எமது அலுவலகம் திறந்திருக்கும் நேரம்
திங்கள் முதல் வியாழக்கிழமை வரை
9.00- 18.00 மணி



| | | |
|---|---|---|
| Baufinanzierung/ | வீடு வாங்குவதற்கு/ கட்டுவதற்கு தேவையான கடன் | இலவச சேவை |
| Umfinanzierung/ | வீட்டுக்கடனை எம்மூடாக மாற்றுதல் | இலவச சேவை |
| Ratenkredit/ | தனிநபர் கடன்கள் | இலவச சேவை |
| Kapitalanlage/ | வீடு வாங்கி வாடகைக்குக் கொடுப்பவர்களிற்கான கடன்கள் | இலவச சேவை |
| Kredit für Selbständige/ | சொந்த வேலை செய்பவர்களிற்கான கடன்கள் | இலவச சேவை |
| Full Service/ | வீட்டிற்கு செல்லும் வரை சகல அலுவல்களும் பார்த்தல் | கட்டண சேவை |
| Immobilien | வீடு விற்பதற்கான சகல ஒழுங்குகள் | கட்டண சேவை |

மேலதிக விபரங்களிற்கு எமது இணையத்தளத்திற்கு இல்லையேல் லங்காசிறி இன்றைய விளம்பரத்திற்கு செல்லவும்

நம்பிக்கை
நாணயம்
உத்தரவாதம்
20 வருட அனுபவம்

அனைவருக்கும் இனிய தைத் திருநாள் நல்வாழ்த்துக்கள்

வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்

ஓசை : 292





ஆரம்பம்: 1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்: குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
'ஓவிக்கலைவேள்'
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A
Chief Edito:
Dr.M.K.S.Sivakumaran B.F.A



Tel: +49 01631992333
+49 01631992333
e-mail: vettimaniy@hotmail.com


"வெற்றிமணிமொழி'
தோல்வியைக் கண்டு அஞ்சுபவர்களிடமிருந்து வெற்றி தானாகவே விலகிச்செல்கிறது


Vettimaniy Ltd
Company No: 8876276


# முஸ்லிம்கள் மீது மற்றுமொரு யுத்தம்!
# "ஒரு நாடு, ஒரு சட்டம்"

கொழும்பிலிருந்து
ஆர்.பாரதி

கொரோனாவினால் மரணமடையும் முஸ்லிம்களின் உடல்களைத் தகனம் செய்வது என கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் பிடிவாதமாக இருப்பது முஸ்லிம்கள் மத்தியில் பெரும் ஆதங்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. உள்நாட்டில் மட்டுமன்றி, சர்வதேச ரீதியாகவும் இதற்கு கடும் எதிர்ப்பு கிளமிபியுள்ள போதிலும், தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள அரசாங்கம் தயாராக இல்லை என்பது தெரிகின்றது.

முஸ்லிம்களை மேலும் பலவீனப்படுத்துவதற்காக அரசாங்கம் தொடுத்துள்ள மற்றொரு யுத்தமாகவே இது உள்ளது.

கொரோனாவினால் மரணமடைந்த முஸ்லிம் தம்பதிகளின் 20 நாட்களேயான சிசு கடந்த திங்கட்கிழமை கொழும்பில் வலுக்கட்டாயமாகத் தகனம் செய்யப்பட்டிருக்கின்றது. முஸ்லிம்கள் மத்தியில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கும் செய்தி இது. ''இந்த அப்பாவி 20 நாள் குழந்தை தனது உடல் தகனம் செய்யப்படுமளவிற்கு செய்த பாவம் என்ன?'' என கேள்வி எழுப்பியுள்ளார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அலிஷாஹிர் மௌலானா.

இந்தக் கேள்விக்குப் பின்னால் உள்ள ஆற்றாமை, குமுறல் இலங்கையில் நடைபெறும் சிறுபான்மை இன மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறைக்குள் இருந்த மீளமுடியாமல் முஸ்லிம்கள் தத்தளித்துக்கொண்டிருப்பதைக் காட்டுகின்றது.

''நான் மனமுடைந்துள்ளேன் வெறுப்புணர்வின் எல்லையைக் கடந்துவிட்டேன்'' என டுவிட்டரில் பதிவிட்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், ''நாம் இன்னும் எவ்வளவு கொடுமையையும் காட்டுமிராண்டித்தனத்தையும் சகித்துக்கொள்ள வேண்டும்?'' எனவும் கேள்வி எழுப்பியுள்ளார். இலங்கையில் கோட்டாபய அரசாங்கம் செல்லும் பாதையையும், யார்த்த நிலைமையையும் இது வெளிப்படுத்துகின்றது.

கொரோனா வைரஸினால் உயிரிழக்கும் முஸ்லிம்களுடைய ஜனா



ஸாக்களை [உடல்களை] அடக்கம் செய்வதா, தகனம் செய்வதா என்ற சர்ச்சை இலங்கை அரசியலில் உச்ச நிலையில் இருந்த போதுதான் அந்த 20 நாள் குழந்தை கொழும்பிலுள்ள லேடி சிச்வே வைத்தியசாலையில் கடந்த திங்கட்கிழமை மரணமடைந்தது. மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் மரணத்துக்குக் காரணம் கொரோனா எனத் தெரிவிக்கப்பட்டது.

அதனையடுத்து குழந்தையின் தந்தையிடம் சில ஆவணங்களில்





கையொப்பமிடுமாறு மருத்துவமனை நிர்வாகம் வலியுறுத்தியது. ஆனால், தந்தை மறுத்துவிட்டார். தொடர்ந்தும் அவர்கள் வலியுறுத்தியதால், குழந்தையின் உடலை அங்கேயே விட்டுவிட்டு அவர் வெளியேறிவிட்டார். பின்னர், குழந்தையின் உடல் கனத்தை மயானத்தில் தகனம் செய்யபடுவதாக தந்தைக்குத் தெரிவிக்கப்பட்டது. தந்தை உடனடியாக மயானத்துக்கு ஓடிச்சென்ற போதிலும், தனது குழந்தை தகனம் செய்யப்படுவதை அவர் பார்க்கவிரும்பவில்லை. பார்க்கும் மன நிலையில் அவர் இருக்கவில்லை.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவம் முஸ்லிம்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியமைக்குப் பல காரணங்கள் உள்ளன. முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் மரணிப்பவர்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்வது அவர்களது வழமை. இஸ்லாத்தில் அவ்வாறுதான் கூறப்பட்டுள்ளது. பாவம் செய்பவர்களை மட்டுமே தகனம் [எரித்தல்] செய்தல் வேண்டும் எனச் சொல்லப்பட்டிருக்கின்றது. அதனால்தான், ''அந்த 20 நாள் குழந்தை என்ன பாவம் செய்தது?'' என்ற கேள்வியை அரிஸாஹிர் மௌலானா எழுப்பியிருந்தார்.

குழந்தையின் மரணத்தையடுத்து கொரோனா வைரஸினால் மரணமடையும் முஸ்லிம்களுடைய ஜனாஸாக்களை அடக்கம் செய்வதா அல்லது தகனம் செய்வதா என்ற சர்ச்சை பாராளுமன்றத்தில் மீண்டும் எதிரொலித்துள்ளது. பிரச்சினை இலங்கையின் எல்லையைத் தாண்டி சர்வதேச அரங்கிலும் பேசுபொருளாகியிருக்கின்றது.

திங்கட்கிழமை பாராளுமன்றத்தில் உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹலீம், இவ்விடயத்தில் முஸ்லிம்களுடைய கரிசனையை வெளிப்படுத்தியதுடன்,

28 ஆம் பக்கம் பார்க்க...








# மடியில் கனம் இருந்ததால்...

**கே.எஸ்.சுதாகர்**
(மெல்போன்– அவுஸ்திரேலியா)



"டொக்ரர்... எதுக்கெடுத்தாலும் பயமா இருக்கு! ஏதாவது மருந்து தாருங்கள்..." பதட்டத்துடன் கேட்டார் சிவம்.

"மொட்டையாகச் சொன்னால் எப்பிடி? கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்கள்" என்றார் சிரித்த படியே குடும்ப வைத்தியர்.

"ஒரே ரென்சனா இருக்கு... தலை வீங்கி வெடிக்கிறமாதிரிக் கிடக்கு. ஹாட்டுக்குள்ள இரத்தம் இல்லாத மாதிரி வெறுமையாய்க் கிடக்கு... இரவில நித்திரை கொள்ள முடிய யேல்லை"

"எவ்வளவு காலமாக இது இருக்கு மிஸ்டர் சிவம்?"

"இரண்டு மாதங்களாக இருக்கு டொக்ரர்"

"ஏதாவது குறிப்பிடத்தக்க சம்பவங்கள் நடந்திருக்கா? ஐ மீன்.. ஏதாவது துக்ககர மாக அல்லது அதீத சந்தோஷமாக?"

அதுவரையிலும் ஒன்றுமே பேசா மல், சிவத்திற்கு அருகில் இருந்த அவரது மனைவி தேவா வைத்திய ரைப் பார்த்தார். பின்னர் சிவத்தைப் பார்த்தார். ஹஇந்த மனிசன் ஏதாவது உளறிக் குழறி விடப்போகுது' என்ற பயத்தில் சிவத்தின் கால்களை நசுக்கி னார், கரப்பான்பூச்சி நசுக்குவது போல்.

"இவருக்கு ஒன்றுமே இல்லை டொக்ரர். தான் செத்துப்போவன் எண்டு பயப்படுகின்றார்" வைத்தியர் கெக்கட்டம் விட்டுச் சிரித்தார்.

"அவருக்கு அப்பிடி ஒன்றும் வய சாகல்ல இப்பதானே அறுபத்தைஞ்சு முடிஞ்சிருக்கு. சரி மிஸ்டர் சிவம்... வேறை என்ன செய்யுது?"

"முந்தி எண்டா நல்ல வேகமா கார் ஓடுவன். நூற்றிப்பத்தில கூட ஓடியி ருக்கிறன். இப்ப கார் ஓடவே பயமா இருக்கு! இன்னொருத்தற்ரை காருக் குள்ளை இருந்து போகவே பயமாக் கிடக்கு டொக்ரர்"

"நீங்கள் கார் ஓடுவியளா?" தேவா வைப் பார்த்துக் கேட்டார் வைத்தியர். அவர் இடமும் வலமுமாக, கோயில் யானை தலையாட்டம் காதை மாறி மாறி ஆட்டினார்.

"அதுதானே பாத்தன்... நீங்கள் அடிக்கடி அங்கை போவம், இஞ்சை போவம் எண்டு அவருக்கு தொந்தரவு செய்திருப்பியள். அதுதான் மனிசன் இப்படிச் சொல்லுறார்..."

"அப்படியொண்டுமில்லை. உந்த மனிசனுக்கு கீலாவாயு..."

"நீங்கள் வருஷத்திலை இரண்டு மூண்டு தரம் சிறீலங்கா போய் வாறனி யள். வேறை நாடுகளுக்கும் சுற்றுலா போய் வந்திருக்கிறியள். அப்ப எப்பிடிப் பிளேனிலை போய் வாற னியள்?" வைத்தியரின் குண்டக்க மண்டக்கக் கேள்வியினால் இருவ ரும் மலைத்துப் போனார்கள்.

"நல்லாக் கேட்டியள் டொக்ரர்... உவருக்கு தனக்கும் ஏதேனும் ஒண்டு எண்டு நாலுபேருக்குச் சொல்ல வேணும். பாத்து ஏதாவது மருந்து குடுத் துவிடுங்கோ.... தொந்தரவைத் தாங்க முடியேலாமல் கிடக்கு... நித்திரை கொள்ள விடுகிறார் இல்லை" வைத் தியர் சில மருந்துகளையும், வைட்ட மின் மாத்திரைகளையும் கிறுக்கினார். எல்லாவற்றையும் பார்மஷியில் வாங் கிக் கொண்டு வீடு வந்தார்கள் சிவம் தம்பதியினர்.

இரவு உறக்கத்திற்குப் போகும் போது, சிவத்தின் காதுகளுக்குள் உதடுகளைச் செருகினார் தேவா.

"நல்ல காலம்.... உளறிக் கொட்டிப் போடுவியள் எனப் பயந்து போனன். அவனவனுக்கு கோடி கோடியெண்டு லொட்டோ விழுகுது. நாலு லட்சத்து எண்பதினாயிரம் விழுந்ததுக்கு இப் படி நாண்டுகொண்டு சாகிறியளே!"

"உனக்கென்ன தெரியும்... நான் படு கிற பாட்டை. ஏதாவது சறிற்றி மோப் பம் பிடிச்சுதெண்டா வீட்டு வாசலிலை வந்து நிக்கும். சொந்தபந்தங்களுக்குத் தெரிஞ்சா, பிறகு வறுக நிப்பினம்."

"அதுக்கொரு வழி நான் சொல் லுறன். சொந்தங்களிட்டைப் போய், வாழ்க்கை நடத்த கஸ்டமாக்கிடக்கு எண்டு சிணுங்கி, அதுகளிட்டைக் கிடக்கிறதை வறுகிப் போட்டிங்க ளெண்டா, பிறகு அதுகள் வாயே திறக்காதுகள்!" "உனக்கென்ன செ ால்லிப்போட்டாய். எனக்கு ஆரேன் கொலை செய்து போடுவான்களோ எண்டு பயமாக்கிடக்கு...."

"ஒரு பத்து வருஷம் வாயை மூடிக் கொண்டு கிடவுங்கோ... அதுக்கிடை யிலை ஒரு அசுகையும் காட்டேல் லையென்றால், எல்லாம் சக்சஸ்."
சிவத்திற்கு அன்பால் ஒரு இடி விட் டார் தேவா.

"அதுக்குப் பிறகு?" ஆவலுடன் சிவம் கேட்டார். ஆர் இருக்கிறமோ "ஆர் கண்டது? ஆண்டவன் விட்ட வழி!"

---

# குப்பை



**சிவப்பிரியன்**
(இங்கிலாந்து)

ஒரு நாட்டில் இருந்து ஒரு நாட் டிற்குப்போனால் ஒரு ஒப்பீடு எப் பவும் தொடரும். அங்கை என்றால் இப்படி இருக்மாட்டார்கள் உடன் வந்து உடம்புக்கு என் என்றுகேட்டு உரியவைத்தியம் உடன் செய்வார் கள். டாக்டர்களே நோயாளியைப் பார்ப்பார். இங்கு லண்டனில் தாதிமா ருக்கு பவர் அதிகம். முதல் அவர்கள் வடித்தெடுத்து பின் பல நாட்களின் பின்தான் டாக்டர் தரினம் கிட்டும்.

இதென்ன பஸ் போட்ட நேரத் திற்கு வருகுதில்லை. யேர்மனியில் என் றால் 13.04 என்றால் அந்த 13.04 க்கு பஸ் தரிப்பில் நிற் கும். இப்படி ஒவ்வொன்றுக்கும் ஒரு ஒப்பீடு.

அன்று நல்ல காற்று சற்று மழையும். யன்னலால் வெளியில் பாரத்தால் குப்பை காற்றில் பறந்து தெருவில்கிடக்கிறது. யன்ன லால் பார்த்தால் ஒரு பெண் அந்த குப்பையை குப்பைத்தொட்டிக்கு வெளிவைத்துவிட்டுபோவதை பாரத் தேன். அவசரமாக வெளியில் போக காற்று அந்தகுப்பையை தெருவெல் லாம் பரப்பியது. தெருவில் ஒரு வய தானவர் நின்றார்.

அவரிடம் யேர்மனியில் என்றால் இப்படி செய்யமாட்டார்கள் என்று சொல்ல நினைத்தேன் சொல்ல வில்லை. ஏதோ எனக்கு உடன் கிட்ல ரின் நினைவு வந்துவிட்டதுபோலும். இருந்தாலும் வாய் சும்மாகிடவாது கேட்டது. இந்தக் குப்பையை யார் வந்து துப்பரவுசெய்வார்கள் என்று.

அவர் குனிந்த தலையை நிமிர்த்தி – யார் முதல் காண்கிறார்களோ அவர் கள் செய்வார்கள் என்றார்.– அவரது இடது கையில் ஒரு பாக்கில் அவர் தெருவில் சேகரித்த குப்பைகளைப் போட்டு இருந்தார். அந்தக் குப்பை கள் என்னோடு தம்மை ஒப்பிட்டுப் பாத்துக்கொண்டன.



அனைவருக்கும் இனிய தைத் திருநாள் நல்வாழ்த்துக்கள்

# ஒரேயொரு கையேடுதான் எம்மிடம் இருக்கிறது

## அது சலிப்பூட்டுகிறது



கவிதா லட்சுமி
(நோர்வே)

நமது சமூகத்தில் ஒரு நபரை இழிவுபடுத்த வேண்டும், காயப்படுத்த வேண்டும், ஒதுக்கி வைக்க வேண்டும் என்றால் எல்லாவற்றிற்கும் ஒரே கையேடு தான் பாவிக்கப்படுகிறது. அதிலும் இரண்டே இரண்டு விடயங்கள் தான் கையில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. சாதாரணக் குடிமகன்களில் இருந்து பெரியார் வரை இந்த ஒரு விடயம்தான்.

ஆணாக இருந்தால், பெண்கள் விடயத்தில் ஆள் சரியில்லை என்று காட்ட முயல்வது. பெண்ணாக இருந்தால் ஆண்கள் விடயத்தில் சரியில்லை என்று காட்ட முயல்வது. அல்லது ஏதும் பணம் தொடர்பாக கொள்ளையடித்தார்கள், திருடினார்கள் எனக் கூறுவது. இதனாலேயே பலரும் பல விடயங்களை மனம் திறந்து பேச அஞ்சி ஒதுங்கி விடுகிறார்கள். பெண்களாக இருந்தால் இன்னும் சொல்லத் தேவையே இல்லை.

இவையெல்லாம் நமது சமூகத்தின் மனம், உடல் சார்ந்த வன்முறை. தக்க விடயத்தை நேர் நின்று பேச முடியாத மனிதர்களால் எடுத்துக் கொள்ளப்படும் மிகக் கேவலமான துருப்பிடித்துப் போன ஆயுதம்.

**பெண்ணும் பெரியாரும்**

பெரியார் பற்றி மட்டுமல்ல, எவராயினும் அவர்கள் பற்றிய முரண்பாடுகள், கருத்து வேறுபாடுகள் இருப்பது யதார்த்தமே. இருக்கவும் வேண்டும். ஆனால் மணியம்மைக்கும் பெரியாருக்கும் இருந்த வயது வித்தியாசத்தை ஒரு பொருளாக எடுத்துப் பேசிக்கொண்டே இருப்பது சலிப்பூட்டுகிறது.


**இதில் என்ன பிரச்சனைதான் இருக்க முடியும்?**

திருமண வயதைக் கடந்த ஒரு பெண், திருமண வயதைக் கடந்த ஒரு ஆணுடன் விருப்பப்பட்டு சேர்ந்து வாழ்வதில் என்ன பிரச்சனை இருக்கப் போகிறது. அதெல்லாம் அவர்கள் தனிப்பட்ட விடயம். இது குழந்தை துஷ்பிரயோகம் அல்லவே. கட்டாயத் திருமணமும் அல்லவே.

70 வயதுடைய ஒருவருடன் குறைந்த வயதுடைய பெண் சேர்ந்து வாழ ஆசைப்பட்டாள் என்பதை என்னால் உடல் சார்ந்து மட்டும் நினைத்துப் பார்க்க முடியவில்லை. முதலில் நாம் இரு மனங்களின் சேர்க்கை என்பதை உடல் சார்ந்து மட்டும் குறுக்கிப் பார்ப்பதை எப்போது நிறுத்தப் போகின்றோம் என்பதே எனது கேள்வியாக உள்ளது.

பெரியாரிடம் ஒருவர் [பெரியாரைச் சீண்டும் நோக்கில்] கேட்டாராம். உனது மனைவியை என்னோடு அனுப்பி வைப்பாயா என்று. அதற்குப் பெரியார் சொன்ன பதில் அவள் விருப்பப்பட்டால் தாராளமாகக் கூட்டிப் போகலாம் என்பதே. இந்தப் பதிலைச் சொல்வதற்கு அவருக்கு எத்தனை தன்னம்பிக்கை இருந்திருக்க வேண்டும். பெண்களின் சுயமரியாதை, சுய முடிவுகள், தொடர்பாக எத்தனை ஆழமான சிந்தனை இருந்திருக்க வேண்டும்? அவளது முடிவுகளை ஏற்றுக் கொள்ள எத்தனை மனப்பக்குவம் இருந்திருக்க வேண்டும்.

இப்சனின் பொம்மை வீடு நாடகம் படித்தவர்களுக்குத் தெரியும் ஒரு பெண்ணுக்கு எது முக்கியம் என்பது.




உண்மையில் ஒரு பெண் காதலை விட, பணத்தை விட, பொருளை விட, ஏன் அன்பை விட விரும்புவது சுயமரியாதையை. அவளது சுயமரியாதையை உள்ளார மதிக்கும் ஒருவனை விரும்புவதையோ, அவனுடன் சேர்ந்து வாழ்வதையோ தான் பெண் விரும்புகிறாள். இதை ஆண்கள் பலரும் நமது சமூகத்தில் இன்றும் உணர்ந்து கொள்வதில்லை என்பதே இந்தக் காலகட்டத்திலும் துயரமானது.

'கடலில் இருந்து ஒரு கன்னி' என்ற இப்சனின் இன்னுமொரு நாடகத்தில் இப்சன் எடுத்துவரும் விடயம் சுதந்திரத்துடனான காதல் என்பதாகும். வாழ்க்கை சுதந்திரமும் காதலும் சேர்ந்ததாக இருக்க வேண்டும் என்கிறார். இரண்டில் ஒன்று குறைந்தாலும் ஒரு மனிதனுடைய [பெண்ணுடைய] காதல் வாழ்க்கை முழுமையடைவதில்லை என்கிறார்.

நூறு வருடங்களுக்கு முன் எழுதப்பட்ட இப்சனின் பொம்மை வீடு நாடகப்பிரதியின் நாயகன் நமது சமூகத்தில் காட்டப்படும் ஒரு நாயக பிம்பத்திற்கு ஒப்பானவன், அன்பைப் பொழிபவன், தனது மனைவியை [நூரா] கண்ணே, மணியே, கிளியே என்று கொஞ்சிக் கொண்டிருப்பவன், 'சமூகம்' எதிர்பாரக்கும் அத்தனை தகுதியும் உள்ள ஆண்மகன். தனது மனைவியை பொத்திப்பொத்தி வைத்திருப்பவன். ஆனால் அவள் ஏன் அவனை விட்டு போகிறாள்? அதுவும் தனது குழந்தையையும் அவனோடு விட்டுவிட்டுச் செல்கிறாள். இப்படியான ஒருவனைப் பிரிந்து செல்லும் ஒரு பெண் [நூரா] மூலம் இப்சன் என்ன சொல்ல விளைகிறார்?

இப்சனின் நூரா அறைந்து சென்ற வெளிக் கதவின் சத்தம் இன்னமும் கேட்டுக் கொண்டிருப்பதாக நோர்வேஜிய மக்கள் இன்றும் சொல்கிறார்கள். அறையப்பட்ட அந்தக் கதவின் சத்தத்தை நமது சமூகம் உணர்ந்து கொள்ள இன்னும் எத்தனையோ நூறு ஆண்டுகள் ஆகலாம் என்பது மனதைக் கனக்கச் செய்கிறது.

இத்தனை ஆண்டுகள் கழிந்தும் பெரியாரை, இப்சனை, சாக்கிரடீசை, பாரதியை, புதுமைபித்தனை, பெண்கள் காதலிப்பதை யாராலும் நிறுத்த முடிவதில்லை என்பது மட்டும் ஆறுதல் அளிக்கிறது!






Tel:0234 23 990 32 | Fax: 0234 7945 7171 | Mob:No:0179 1484 892 | e.mail:siva@hotmail.de

அனைவருக்கும் இனிய தைத் திருநாள் நல்வாழ்த்துக்கள்

பொலிகையூர் ரேகா
(திருச்சி– தமிழ்நாடு)

# தாய் நாடும் தமிழ் நாடும்



எந்த நாட்டில் வாழ்ந்தாலும் எங்கு வாழ்ந்தாலும் தம் தாய் நாட்டையும் தாய் வீட்டையும் நினைத்து ஒப்பீடு செய்யும் உளநிலை அனைவருக்குமே உண்டு. நன்மைகள்,தீமைகள் வேறுபட்டாலும் ஒப்பீடு என்பது எப்போதும் உள்ளவைதான். அந்த வகையில் தாய் நாட்டையும் தமிழ்நாட்டையும் ஒப்பீடு செய்து பார்ப்பவர்களுக்குத் தெரியாத பல சிக்கல்கள் தமிழ்நாட்டில் வாழும் ஈழத் தமிழர்களால் மட்டுமே பட்டறிவாகக் கூற முடியும்.

‘‘வந்தாரை வாழ வைக்கும் தமிழகம்’’ என்ற பெருமைக்குச் சொந்தமான தமிழகம் ஈழத் தமிழர்களை வாழ வைக்கின்றது என்பது என்னமோ உண்மைதான் ஆனால் முன்னேற வழிவிடவில்லை என்பதும் வேதனைக்குரிய கருத்தாகும்.

இது பலருக்கு வியப்பைக் கொடுத்தாலும் இது கசப்பான உண்மை.

இடம்பெயர்ந்து பல்வேறு நாடுகளில் வாழும் ஈழத் தமிழர்களுக்குக் கிடைக்கும் எந்தச் சலுகைகளும் தமிழ் நாட்டில் வாழும் ஈழத் தமிழர்களுக்குக் கிடைத்ததில்லை. மட்டுப்படுத்தப்பட்ட சில சலுகைகளுக்கும் வலிந்து திணிக்கப்பட்ட கெடுபிடிகளுக்கும் பின்னால் பல அரசியல் காரணங்கள் இருந்தாலும் தமிழ் நாட்டைத் தம் வாழிடமாகத் தேர்ந்தெடுத்ததற்காய் ஈழத் தமிழர்கள் இழந்தவை அதிகம் என்பதை ஒருபோதும் மறுக்க முடியாது.

குடியுரிமைச் சிக்கல் இருந்து விட்டுப் போகட்டும் முன்னேற வழியிருந்தால்கூடப் போதும் என்ற உளநிலையைப் பலமாகவே எண்ணுமளவிற்குச் சட்டச் சிக்கல்களும், நடைமுறைச் சிக்கல்களும் அதிகமாக உள்ளன.

படித்த மாணவர்கள் அதற்கேற்ற வேலைக்குச் செல்வதில் எத்தனையோ சிக்கல்கள். ஒரு பன்னாட்டு நிறுவனத்தில் வேலை செய்ய இலங்கை சென்று வேலை அனுமதி நுழைவிசைவில் [எளைய] வர வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றனர். இலங்கைக்குச் சென்று திரும்பும் வசதி இருந்தால் இங்கே வேலை தேட வேண்டிய அவசியமே அவர்களுக்கு இருந்திருக்காது என்ற புரிதல் கூட இல்லா நிலையை நிலவுகிறது. தொழில் தொடங்குவதாக இருந்தால் பதிவிற்காக இலங்கை சார்ந்த பத்திரங்கள் வழங்கப்பட வேண்டும். விதிவிலக்கான பல செயல்கள் இடம்பெறும் வேளையில் வாழ்வாதாரத்திற்காய்த் தடுமாறும் ஈழத்தமிழர்களிற்காய் எவ்வித தளர்வுகளும் இல்லை என்பதும் சட்டப்படியான முறைகளைப் பின்பற்றுவதாக அலைக்கழிக்கப்படுவதுமே இடம்பெறுகிறது. பெரும்பாலான வேலைகளுக்கு விண்ணப்பிக்கும்போது நாடு என்ற பிரிவில் இலங்கை என்று போட்டுவிட்டால் எதிர்கொள்ளும் சிக்கல்கள் அதிகம். ஏனைய நாட்டினருக்கான நடைமுறைகளே இவர்களுக்கும் வலியுறுத்தப்படும். ஏதிலிகளாயிருப்பதற்காக எந்த விதிவிலக்குகளும் இல்லை. கல்வியைப் பொறுத்தமட்டில் சில பல்கலைக்கழகங்கள் ஈழத் தமிழ் ஏதிலியர்க்கும் இந்திய மாணவர்களுக்கான கட்டணத்தையே வசூலிப்பது பாராட்டத்தக்கது. சிலர் வெளிநாட்டு மாணவர்களுக்கான கட்டணத்தையே இன்னமும் எதிர்பார்க்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வேலை, படிப்பு,தொழில் என்பவை தாண்டி இன்னொரு கண்ணோட்டமும் உள்ளது. வெளிநாட்டுப் பணத்தில் வசதியாக வாழ்பவர்கள் என்ற கண்ணோட்டத்தில் வீட்டு வாடகையில் இருந்து வேவ்வேறு கட்டணங்கள் வரை அதிகப்படியான கட்டணங்களும் வசூலிக்கப்படுகிறது.

இவை தாண்டி ஓட்டுனர் உரிமத்திலிருந்து,அடையாள அட்டைகள் பெறுவது வரை பல சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். பிறப்புச் சான்றிதழ்கள், இறப்புச் சான்றிதழ்கள், திருமணப் பதிவு என்பனவும் பல நடைமுறைச் சிக்கல்களுக்குப் பின்னரே பதியப்படும். இந்திய நாட்டவரைத் திருமணம் செய்த ஈழத் தமிழர்களுக்கும் அவர்கள் பிள்ளைகளுக்குமே குடியுரிமை பெறுவதில் எண்ணற்ற நடைமுறைகளும் சிக்கல்களும் உள்ளன.

வேறு எந்த மொழி பேசும் நாட்டிலும் அங்கு சென்றவர்களை அரசு அந்நியர்களாகப் பார்த்ததில்லை. அந்நாட்டவர்க்கு உள்ள சலுகைகளை வழங்குவதோடு சில ஆண்டுகளில் குடியுரிமையும் வழங்குகிறது. ஆனால் நம் மொழி பேசும் மக்கள்,நம்மவர்கள் என்று தமிழகம் வந்த ஈழத் தமிழர்கள் சலுகைகள் தாண்டிய சிக்கல்களை மட்டுமே எதிர்கொள்கின்றனர். ஏதிலியர்களுக்கான சலுகைகளோ,குடியுரிமையோ இல்லாவிட்டாலும் வேலை, நடைமுறைச் சிக்கல்களுக்கு எளிய தீர்வு என்பவற்றைக் கொடுத்தாலே ஈழத் தமிழர்கள் முன்னேற வழிவகுக்கும் என்பதே பலரின் கருத்தாகும்.





யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் ஜெர்மனியில் nordrhein westfalen பகுதியை வசிப்பிடமாகவும் இருக்கும் பெற்றோர். ஜெர்மனியில் பிறந்து வளர்ந்த customer sales manager ஆக பணியாற்றும் தங்கள் 27 வயது மகனுக்கு கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த நல்ல குணமடைய மணமகளை தேடுகின்றனர் பெற்றோர். உறவினர் மாத்திரம் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:- (0049)- 017691481889






# என்னைக் காணும் போதெல்லாம் துரத்தியது!



எனது பாடசாலை நாட்களில் ஆங்கிலப் பாடத்திடம் அகப்பட்டு நான் பட்ட அவஸ்தைகளைப் பற்றி பல தடவைகள் எழுதியிருக்கின்றேன்...இது அதைப்பற்றியது மட்டுமல்ல!

ஆங்கிலம் அப்போது எனக்கொரு வேண்டா விருந்தாளி...ஏன், என் வீட்டு முடக்கில் உள்ள விடுகாலி நாயைப் போல என்று வைத்துக் கொள்ளுங்களேன்...

என்னைக் காணும் போதெல்லாம் துரத்தும்...நானும் ‘அப்பாடா, இன்று தப்பிவிட்டேன்’ என்று வீடு வந்து சேர்ந்துவிடுவேன்... திரும்பவும் அடுத்த நாள் துரத்தலும் தப்புதலும் தொடரும்...

ஆங்கிலமும் அப்படித்தான்... க.பொ.த சாதாரண தரத்துடன்[பத்தாம் வகுப்பு] இந்தக் கழுதையை எப்படியாவது கழற்றி விட வேண்டும் என்ற திடகாத்திரத்துடன் எப்படியோ சமாளித்துச் சமாளித்து ஆறாம், ஏழாம் வகுப்புகளைத் தாண்டிவிட்டேன்...எட்டாம் வகுப்பில்[என நினைக்கின்றேன்] எனக்காக பிசாசே காத்திருந்தது !

மகேசன் மாஸ்டர் என யாழ் இந்துவில் சிறந்த ஆங்கில ஆசான் ஒருவர் இருந்தார், அவர் எனக்குக் கற்பிக்கவில்லை, அவரைப் பற்றி அடுத்த வகுப்பு நண்பர்கள் சொல்லக் கேள்விப்பட்டிருக்கின்றேன். நல்ல மனிதருங்கூட! அவர், எமது பேச்சு திறமையை வளர்ப்பதற்கு, ஒவ்வொரு கிழமையும் எல்லா வகுப்பினரையும் அழைத்து, பிரார்த்தனை மண்டபத்தில் வைத்து, ஒரு பெட்டிக்குள் எல்லோரது பெயரையும் எழுதிப்போட்டு, அதைக் குலுக்கி எடுக்கும்போது எவரது பெயர் வருகிறதோ அந்தந்த மாணவர்கள், எல்லோரினதும் முன் நின்று ஆங்கிலத்தில் எதையாவது பேச வேண்டும் என்று கூறினார்.

ஆங்கிலத்தில் திறமையுள்ள மாணவர்கள் நீயா? நானா? என் பெயர் வரக்கூடாதா? என்று ஏங்கித் தவித்தார்கள்...

எனது நிலைமை மிகவும் கவலைக்கிடம்...தமிழிலேயே நாலு வசனம் சொல்வது பிரச்சனையாக இருந்தபோது... ஆங்கிலத்தில்? அதுவும் எல்லோர் முன்னிலையில்?

இருதயம் நெஞ்சாங் கூட்டிலிருந்து வெளியே வருவதும் போவதுமாக இருந்தது... பயத்தை வெளியே காட்டினால் அந்த மனுசன் நேராகவே என்னை அழைத்துப் பேசவிடலாம் என்பதற்காக, அமைதியாக பிரார்த்தனை மண்டபத்தில் முன்னிருந்த



**கனகசபேசன் அகிலன்**
**(இங்கிலாந்து)**

கடவுளை நினைத்து, மனதிற்குள், தெரிந்த தேவாரங்களையெல்லாம் பாடினேன்... அப்பர் சுவாமிகள் ‘சொற்றுணை வேதியன்’ பாடி உயிர் தப்பியது படித்திருக்கின்றேன், அதை நான் நம்பவில்லை! நான் அன்று தப்பியபின்தான் தேவாரத்தின் மகிமை முற்றாக விளங்கியது !

இப்படியான இக்கட்டான நிலைமையில் இனிமேலும் அகப்படக்கூடாது என்பதற்காக திட்டங்களை தீட்டினேன்...அந்தக் காலங்களில் கர்த்தால்/ பகிஷ்கரிப்பு அடிக்கடி நடக்கும், எனவே ஆங்கிலப் பேச்சு உள்ள நாட்களில், காலையில், எனது கிராமத்தில் பஸ்தரிப்பு இருக்கும் இடத்தில் உள்ள கட்டட சுவர்களில் ‘கர்த்தால்/பகிஷ்கரிப்பு’ என சுவரொட்டிகளை கண்டால் அதைச் சாக்காக வைத்து பாடசாலைக்குப் போகாமல் வீடுக்குத் திரும்பிவிடுவேன். ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு சாக்கு! இப்படி சிலவாரங்கள் போன பின் ஏதோ காரணத்திற்காக ஆங்கிலப் பேச்சை மகேசன் மாஸ்டரால் தொடர முடியாமல் போய்விட்டது...‘மக்கள் சேவை மகேசன் சேவை’ என்பார்கள் ஆனால் மகேசன் மாஸ்டரே மக்கள் சேவையைச் செய்தது எமது பாடசாலை மாணவர்களிற்கு கிடைத்த வரப்பிரசாதம்!

என்னுடைய அன்றைய பதட்டத்திற்கு என்ன காரணம் என்று எண்ணியபோது முக்கியமாக இரண்டு விடயங்கள் எனது மனதில் தென்பட்டது எல்லோர் முன் நின்று பேசுவதற்குள்ள கூச்ச சுபாவம், பேசும் பொருள் தெரியாமை! பேசும் பொருள் தெளிவாகத் தெரியுமாயின் கூச்சத்தை ஓரளவு சரிப்படுத்திக் கொள்ளலாம், அன்று, நாய் துரத்தும் போது தப்பியது போல, எப்படித் தப்பலாம் என்று யோசித்து நேரத்தை வீணடித்தேனே தவிர, யாரிடமாவது கெஞ்சிக் கேட்டாவது ஆங்கிலத்தில் ஐந்து வரிகளை எழுதிப் பாடமாக்கி, ஒரு கண்ணாடி முன் நின்று அதைச் சொல்லிப் பார்த்திருக்கலாம் என்று என் மூளைக்கு அப்போது தோன்றவில்லை.

மகேசன் மாஸ்டர் தன் வகுப்பில் படித்த மாணவர்களை இதற்காகத் தயார் படுத்தினார் என்று பின்பு அறிந்துகொண்டேன் ஆனால் எனது வகுப்பு ஆங்கில ஆசிரியர் அதை எமக்குச் செய்யவில்லை... என்னைப் போன்ற ‘தப்பினான் கம்பெனி’ மாணவர்களும் ஆசிரியரின் உதவியை நாடவில்லை. ஆங்கிலம் எட்டாப்பழம் என்று புறக்கணித்துவிட்டோம்!

பல வருடங்கள் கழித்து வெளிநாடுகளிற்கு வந்த என்னைப்போன்ற பலர் ஆங்கிலத்தை ஓரளவு எழுதிப் பேசி ஏதோ வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கின்றோம். ஏன், ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, சுவிற்சர்லாந்து போன்ற நாடுகளுக்குச் சென்றவர்கள் என்றுமே கற்றிராத மொழிகளைப் பயின்று அந்நாடுகளில் தொழில் புரிகின்றார்கள். விமானத்தில் வெளிநாடு வரும் போது ஆங்கிலமும், வேறு மொழிகளும் திடீரென்று என்ன தலையில் புகுத்தப்பட்டதா? இல்லை! ‘கட்டாயம்’ என்று வரும் பொழுது எல்லாம் ஒழுங்காக மூளையில் ஏறிவிடும்...இதையே எந்த வித அழுத்தமுமின்றி பாடசாலைச் சூழலில் கற்பது எவ்வளவு இலகுவான விடயம் – இதை, நான் அன்று தப்பித் தப்பி வாழ்ந்தது போல, அதே மன நிலையுடன் வாழும் இன்றைய மாணவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் – தயவு செய்து, தப்பி ஓட எண்ணாதீர்கள்,

17 ஆம் பக்கம் பார்க்க...



அனைவருக்கும் இனிய தைத் திருநாள் நல்வாழ்த்துக்கள்

# கடுகுக்கதைகள்

## மனப்பாங்கு

இந்த சின்ன விடயத்தை எல்லோரும்
பெரிதா எடுத்தது பிடிக்கவில்லை என்றார்.
பல மணித்தியாலமாக கோபத்துடன்,
யார் யார் எல்லாம் இந்த விடயத்தை
பெரிதாய் எடுத்தவை என்று குறைபட்டார்.
எனக்கு அவரைப்பார்க்க சரியான
பாவமாய் இருந்தது இருந்தும்
அந்த சின்ன விடயம் என்னவென்று
அறிய வேண்டி அவரிடமே,
அந்த சின்ன விடயம் என்ன என்று
கேட்டும் விட்டேன்... உடனே
கோபம் கொண்டு, பார்த்தியா நீயும்
அந்த சின்ன விடயத்தை பெரிது படுத்திறாய்
என்றாரே பார்க்கலாம்!

## சோடி

வீட்டில அப்பின் ரீவி ரிமோற்றை காணேல்லை.
இவள் சின்னவள்தான்
எங்கேயோ போட்டிட்டாள்.
தேடச் சொன்னால், தேடினால் தொலைந்தது
கிடைக்கவா போகிறது என்ற
அலட்சியமான பதில்.
தொலைந்ததுகூட பரவாயில்லை, ஆனால்
இந்த அலட்சியமான பதில் இருக்கிறதே...
கோபத்தில இரண்டு சாத்தவேணும் என்று துடிப்பு,



அநியாயத்திற்கு இந்த நாட்டில
அதுவும் முடியாது.
அப்படி இருந்தும் கிட்டப்போய்
ஒரு கிள்ளுப் போட்டன்.
அதற்கு அவள் என்னை முறைத்து,
'எத்தனையோ பேர் ரீவியை தொலைத்துப் போட்டு
ரிமோற்றை என்ன செய்யிறது
என்று தெரியாமல்
யோசித்துக்கொண்டு இருப்பினம்.
அவையிட்டை கேட்டுப் பாருங்கோ,
இங்க கத்திறதை விட்டுட்டு'
என்றாளே பார்க்கலாம்!

## கலப்படம்

தேனை அபகரித்தான் குப்பிகளில்
பதுக்கினான்
தேனீ ஒன்று தடுமாறி குப்பியில் விழுந்தது
மூழ்கி மூச்சு நிற்கும்
கடைசி நொடியில் மனிதனைப் பார்த்து
பரிதாபமாய் கேட்டது மனிதா இதிலுமா!

## மடமை

படிக்கட்டுகள் மாடிக்கு போகுது
என்றார்கள் நானும் ஏறிக்கொண்டு
இருக்கின்றேன் மாடியில் என்ன
இருக்கென்று தெரியாமலே!



## முரண்பாடு

குழந்தை உண்ண மறுத்தது
பாட்டிக்கு ஊட்டிடுவேன் என்று
அம்மா பயமுறுத்தினா பாட்டியும் ஆ என்றார்
உடனே குழந்தை ஆஆ என்றது
அப்புறம் பள்ளியில் எள் என்றாலும்
எட்டாய் பகிர்ந்து உண்
என்று பாடம் படித்தது!

தமிழினி பாலசுந்தரி -
நியூஸ்லாந்து



## பானையும், அகப்பையும் இல்லாமலே அதனைக் கண்முன் காட்டும் கலைநயப் பொங்கல்

**த**ண்ணீர் குடத்தில் எடுத்து வரும் பெண்ணைக் குடம் இல்லாமலே இடையும், குடத்தை அணைக்கும் கையும் முகத்தில் சுமையும் கொண்டு காட்சிப்படுத்தவல்லது பரதம்.

மயில் நடனத்தில் ஆடுபவர் தலையில் மயிலின் முகம் சொண்டு அவற்றை அணியாது, விரல்கள் சொண்டாகி நிற்பதும், விழிகள் முகமாகி நிற்பதும் அற்புதமான நடனம்.

இங்கே பானையும், அகப்பையும் இல்லாமல், கலைநயப் பொங்கலைக் காட்சிப்படுத்துபவர்கள் நாட்டியக்கலாவித்தகர் நிமலன் சத்தியகுமார், நாட்டியக்கலாவித்தகி தீபனா தர்மபாலன். இவர்கள் யேர்மனி ஆடற்கலாய இளம் ஆசிரியர்கள். [முன் அட்டைப்படத்தில் தைப்பொங்கல் படைக்கிறார்கள்]

படப்பிடிப்பு: Photography_kr (kiru)




அனைவருக்கும் இனிய தைத் திருநாள் நல்வாழ்த்துக்கள்




# கொலஸ்டரோல் சிகிச்சையில் புதிய அணுகு முறைகள்

**கொலஸ்டலோல் அளவு இப்ப குறைஞ்சு போட்டுதெண்டு. குளிசையின் அளவைக் குறைக்கலாமா? நிப்பாட்டலாமா?**

"பாருங்கோ டொக்டர் என்ரை கொலஸ்டலோல் அளவு எவ்வளவு குறைஞ்சு போட்டுதெண்டு. ஆனால் குளிசையின் அளவைக் குறைக்கவோ நிப்பாட்டவோ வேண்டாம் என்று ஸ்பெசலிஸ்ட் சொல்லுறார்'' ரிப்போட்டை நீட்டியபடி சொன்னார்.

நான் அவரது கேள்விக்கு நேரடி மறுமொழி சொல்லவில்லை. எதிர்க் கேள்வி கேட்டேன்.

''நீங்கள் ஏன் கொலஸ்டரோல் மருந்து பாவிக்கிறனீங்கள்''

ஒன்றும் தெரியாத அடிமடையன் ஒருவனைப் போல என்னைப் பார்த்துக்கொண்டு ''வேறை என்னத்துக்கு இரத்தத்திலை கொலஸ்டரோல் அளவைக் குறைக்கத்தான். இப்ப அளவு குறைஞ்சு போட்டுது மருந்தைக் குறைக்கலாம்தானே.'' என்றார்.

டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்

''உங்களுக்கு ஹாட் அட்டக் அல்லது பக்கவாதம் எதிர்காலத்தில் வரவேண்டும் என விரும்பினால் மருந்தை நிப்பாட்டுங்கோ'' என்று முகத்தில் அடிக்குமாற்போலச் சொல்லி அவரது மனத்தை நோகடிக்க விரும்பவில்லை.

## மாரடைப்பு பக்கவாத பாதிப்புகள்

அவர் எண்ணுவதுபோல வெளிப்படையான காரணம் குருதிக் கொலஸ்டரோல் அளவைக் குறைப்பதுதான் என்ற போதும் அடிப்படைக் காரணம் வேறு ஆகும்.

காரணத்தை விளக்கினேன்.

இன்று மனிதர்களை மரண வாயிலில் தள்ளுவதில் முன் நிற்பவை மாரடைப்பும் பக்க வாதமும் ஆகும். இவை இரண்டும் வருவதற்கு முக்கிய காரணம் இரத்தக் குழாய்களில் கொழுப்பு படிந்து அவை அடைபடுவதுதான். இரத்தக் குழாய்களில்



கொழுப்பு படிவது கொலஸ்டரோல் அதிகரிப்பதால் ஆகும்.


இருந்தபோதும் மாரடைப்பு பக்கவாதம் ஆகியன வருவதற்கு குருதியில் அதிகரித்த கொலஸ்டரோல் மட்டும் காரணம் அல்ல.ஒருவரது வயது என்ன என்பது ஒரு முக்கிய காரணமாகும். வயது அதிகரிக்க அதிகரிக்க மேற்கூறிய பாதிப்புகளுக்கான சாத்தியங்கள் அதிகமாகும்.

உலகின் எந்தப பகுதியைச் சார்ந்தவர் என்பது மற்றொரு காரணமாகும். வெள்ளையனா, ஆபிரிக்கனா, ஆசியனா என்பது முக்கியமாகும். இதற்குக் காரணம் உங்களையும் என்னையும் போன்ற ஆசிய நாட்டவர்களுக்கு மாரடைப்பு பக்கவாதம் போன்ற நோய்ப் பாதிப்பு வருவது அதிகமாகும்.

புகைப்பவர்களும் புகைக்காதவர்களை விட இவை வரும் சாத்தியம் மிக அதிகமாகும். இவற்றைத் தவிர நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கு மாரடைப்பு மற்றும் பக்கவாதம் வருவதற்கான சாத்தியம் ஏனையவர்களை விட அதிகமாகும்.

## பாதிப்பு வரக் கூடுமா என்பதை முற்கணித்தல்

மேற்கூறிய காரணிகளை எல்லாம் ஒட்டுமாகக் கணக்கில் எடுத்து ஒருவருக்கு எதிர்காலத்தில் மேற்கூறிய பாதிப்புகள் வருவதற்கான சாத்தியம் எவ்வளவு **(ASCVD Risk)** என்பதை முன்னதாகவே கணக்கெடுக்க முடியும். அதற்கு ஏற்பவே கொலஸ்டரோல் மருந்தைக் கொடுக்க வேண்டும் என அமெரிக்காவில் உள்ள மருத்துவக் கழகங்கள் பொதுவான பரிந்துரை செய்துள்ளன.




ஆபத்தைக் இலகுவாகக் கணிப்பதற்கான ஒரு கல்கூலேட்டரை உருவாக்கி மருந்துவர்களின் பாவனைக்காக இணையத்தில் கிடைக்க வசதி செய்து தந்துள்ளார்கள். **ASCVD Risk calculator** என்பதே அது.

இதில் முக்கிய அம்சம் என்னவென்றால் குருதியில் கொலஸ்டரோலின் அளவு எவ்வளவாக இருக்கிறது என்பதை விட ஒருவருக்கு மாரடைப்பு பக்கவாதம் மற்றும் காலிலுள்ள குருதிக் கலங்கள் அடைபடாமல் தடுப்பதற்கு மருந்து தேவைப்படுமா என்பதையும் எவ்வளவு மருந்து தேவைப்படும் என்பதையும் கவனத்தில் கொள்கிறார்கள்.



கொலஸ்டரோலுக்கு அதிகம் உபயோகிக்கும் மருந்துகளான ஸ்டரின் வகை மருந்துகள் பற்றிய ஒரு முக்கிய விடயத்தைக் குறிப்பிட வேண்டும். இவை பாதிப்பை ஏற்படுத்தும் எனப் பலர் தவறாகக் கருதுவதற்கு மாறாக மிகவும் பாதுகாப்பான மருந்துகளாகும் அவை.

**Rosuvastatin , Atrovastatin, Simvastatin** போன்ற ஸ்டரின் வகை மருந்துகள் ஒருவரது குருதியில் உள்ள கொலஸ்டரோல் அளவைக் குறைப்பதற்காகப் பொதுவாகக் கொடுக்கப்பட்டுகிறது. ஆனால் இந்த மருந்துகள் அதற்கு அப்பாலும் செயற்படுகின்றன. ஆவை குருதிக் குழாயில் ஏற்கனவே

26 ஆம் பக்கம் பார்க்க...






சூரியனின் கவர்ச்சி இல்லாவிட்டால் பூமியால் நிலையாகச் சரியாக தன்வழிப் பாதையில் சுழலமுடியுமா? புவியீர்ப்பு சக்தியின்றி மனிதர்களால் நிலைத்து நிற்க முடியுமா? கண்ணுக்குத் தெரியாது எங்கோ ஒரு மூலையில் இருந்து எம்மை அறியாமலும் அறிந்தும் பலரின் பங்களிப்புக்கள் எம்முடைய உயர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருக்கின்றன. எண்ணம் எம்முடையதாக இருந்தாலும் எம்மைத் தூக்கி நிறுத்த ஒருவர் துணைவருவார் என்பது உண்மையே. தற்போது பல நிறுவனங்கள், வியாபார ஸ்தாபனங்கள், விஞ்ஞானிகள், கண்டுபிடிப்பாளர்கள் என அனைவரின் வளர்ச்சிக்குப் பின்னே பலரின் உழைப்பும் உதவியும் தியாகங்களும் அடங்கியிருக்கும்.

கோடீஸ்வரன் பில்கேட்ஜ் உயர்வுக்கு அடிப்படையில் அவர் நண்பன் Paul allem இருந்திருக்கின்றார். விஞ்ஞானி ஸ்ரீபன் ஹார்க்கின் (Stephen Hawking) ஆராய்ச்சிக்கும் ஆற்றலுக்கும் பின்னே டிக்ரான் தஹ்ரா (Dikran Tahta ) என்னும் கணித ஆசிரியர் இருந்திருக்கின்றார். கற்பித்தலில் மட்டுமன்றி அவரை சக்கர நாற்காலியில் தள்ளிக் கொண்டு செல்வது வரை அவரின் பங்களிப்பு இருந்திருக்கின்றது. நோய்வாய்ப்பட்டு தற்கொலைக்கு முயற்சியில் இருந்த போதும் அவரைக் காப்பாற்றி தன்னுடைய முயற்சியினால் ஹார்க்கிங் ஐ முன்னுக்கு கொண்டுவர கூடவே இருந்து காதலையும் அன்பையும் பகிர்ந்து கொண்டு ஒரு காதலியாக மனைவியாக தாதியாக கூடவே பயணித்தவர் ஜேன் ஹார்க்கிங் (Jane Hawhing) ஆவார். இவர்களின் ஒத்துழைப்பும் உதவியும் இல்லாது விட்டால் வெறும் முகத்தசைகளின் அசைவை மட்டும் வைத்துக் கொண்டு வானத்தை நோக்கி ஸ்ரீபன் ஹார்க்கிங் ஆராய்ச்சிகள் நிகழ்த்தியிருக்க முடியுமா? வாடிக்கையாளர்களை நம்பியே உற்பத்தியாளன். அவனை ஊக்கிவிக்கும் வங்கிகள் என உயர்ச்சிக்குப் பின் பல கைகள் மறைந்திருக்கும் என்பது உண்மையே. நாம் காணும் உலகத்தை விட்டு இந்த பிரபஞ்சமும் இப்படித்தான் இயங்குகின்றது.

இன்று நாம் போற்றும் இரண்டு இதிகாசங்களான மகாபாரதம், இராமாயணம் என்னும் இரண்டையும் எடுத்து நோக்கினால். இவை வெளிவருவதற்கும் காரணகர்த்தாக்கள் இல்லாமல் இல்லை. கம்பர் கம்பராமாயணத்தை எழுதிவிட்டு இதனை அரங்கேற்றுவதற்கு உதவி நாடி சடையப்ப வள்ளலிடம் செல்கின்றார். அவரோ சோழ மன்னனிடம் கம்பரை அனுப்புகின்றார். மன்னனோ தன்னுடைய அரசிலே உள்ள சிக்கல்களைக் காரணம் காட்டி திருவரங்க ஆச்சார்யார்களுக்கு திருவோலை அனுப்புகின்றான். ஆனால் அவர்களோ தில்லைவாழ் அந்தணர்களின் ஒப்பிதல் பெற்றுவரும்படி அனுப்புகிறார்கள். அப்போது பாம்பு



தீண்டி இறந்த ஒருவனை நாக பாசத்துப் பாடல்கள் பாடி வியாசர் உயிர்ப்பித்தாராம். அதன் பின்புதான் அவருடைய காவியம் சிறப்பு என்று தீட்சிதர்கள் ஒப்பிதல் கொடுத்தார்களாம். இவ்வாறு அலைந்து திரிந்து இறுதியில் திருவரங்கம் சென்று அரங்கேற்றம் தொடங்கும் போது நஞ்சடகோபனைப் பாடினாயா? என்று ஒருவர் தடுத்தார். பின் சடகோபரந்தாதி பாடினார். அதன் பின் அரங்கேற்றம் தொடங்க பல எதிர்ப்புகள் வைணவர்களிடமிருந்தெல்லாம் தோன்றியது. இறுதியில் ஸ்ரீமன்நாத முனிகள் இரணியவதைப் படலம் ஒன்றே போதும் கம்பரின் காப்பியம் தெய்வீக காப்பியம் தான் என்பதற்கு ஐயம் இல்லை. இது காப்பியத்தில் இடம்பெறலாம் என்றாராம். ஒரு நூல் அரங்கேற எத்தனை சோதனைகளைத் தாண்ட வேண்டும் என்பது தற்காலத்திலிருப்போர்க்குப் புரியாது. ஆனால், ஒரு நூல் வெளிவர பலரின் உதவிகள் இருந்திருக்கின்றன என்பதை அறியக் கூடியதாக இருக்கின்றது.

இதேபோல் மகாபாரதத்தை வியாசர் சொல்லச் சொல்ல பிள்ளையார் எழுதியதாகவும் நிறுத்தாமல் வேகமாகப் பாடவேண்டும் என்று பிள்ளையார் நிபந்தனையிடப் பாடலைப் புரிந்து கொண்டு எழுத வேண்டும் என்று வியாசர் கட்டளையிட்டார். சம்மதித்த பிள்ளையார் வேதவியாசர் சொல்லச் சொல்ல எழுதிய வேகத்தில் பிள்ளையாரின் எழுத்தாணி உடைந்தது. உடனே தன்னுடைய தும்பிக்கையின் தந்தத்தை உடைத்து பிள்ளையார் எழுதினார் என வரலாறு கூறுகின்றது. இவ்வாறு மாபாரதத்தின் தோற்றத்தில் பிள்ளையாரின் பங்கு இருந்திருக்கின்றது.

சங்க இலக்கியங்களிலே அகத்திணைப் பாடல்களில் வெகுவாகப் பேசப்படுபவர் தோழி. காதலன் காதலியிடையே காதல் மலர்வதற்கும் இரவுக்குறி பகற்குறி என்று சந்திப்பு நிகழ்வதற்கும் தோழியின் அர்ப்பணிப்பும் ஆலோசனைகளும் மிகுந்து இருந்திருக்கின்றன.

> ‘‘அந்தணர் பெரியோய்!
> அவலமின்றி இருமின்
> கோதாவரியின் குளிர்பூஞ்சாரலில்
> அச்சம் ஊட்டிய ஞமலியை இன்று
> கதமிகு சீயம் கடித்துக் கொன்றதே’’

இப்பாடலின் சந்தர்ப்பம் காதலர் சந்திப்புக்கு தோழியின் உதவியை அழகாக எடுத்துக் காட்டுகின்றது. கோதாவரிக் கரையிலே ஒரு பூஞ்சோலையில் காதலர் இருவரும் சந்திக்க எண்ணினர். ஆனால், அதற்கு முன்னமே அந்த இடத்தில் ஒரு அந்தணர் உலாவிக் கொண்டிருக்கின்றார். அவரை எப்படி அந்த இடத்தில் இருந்து அனுப்பலாம் என்று எண்ணிய தோழியானவள் அந்த அந்தணர் நாய்க்கு அஞ்சுபவர் என அறிந்து வைத்திருக்கின்றாள். எனவே அவரிடம் சென்ற தோழி நீ அஞ்சாதே அந்த நாயை ஒரு சிங்கம் கொன்று விட்டது என்கின்றாள். நாய்க்கு அஞ்சுபவர் சிங்கம் என்றால் அந்த இடத்தில் நிற்பாரா? இவ்வாறு காதலுக்கு உதவிய தோழியர் அர்ப்பணிப்புகள் பற்றி சங்கப் பாடல்கள் பல எடுத்துக்காட்டுகின்றன.

இவ்வாறு ஒருவரின் மகிழ்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் வெற்றிக்கும் பலரின் தியாகங்களும் ஒத்துழைப்புக்களும் உதவிகளும் நிச்சயம் அமைந்திருக்கும் என்பது உண்மையே.




2019 finzamt சட்டத்துக்கு அமைய உங்கள் வியாபார தளங்கள் உள்ள Kasse களை TSE Kasse- System த்துக்கு மாற்றுவதற்கும் புதிய Kasse கொள்வனவு செய்வதற்கும்.

Yupp Tv புதுப்பித்தல், புதியவை, தொழில்நுட்ப உதவிகளுக்கும்.

corona கட்டுப்பாடு காலத்தில் உங்கள் திருமணம் standesamt மற்றும் நிகழ்வுகளை நேரடியாக பார்க்க முடியாமல் இருக்கும் உறவுகளுக்கும் social media-facebook வசதிகள் இல்லாதவர்களுக்கும் நேரடியாக உங்கள் நிகழ்வுகளை நேரடி ஒளிபரப்பு செய்வதற்கும்.

உங்கள் வியாபார தளங்கள் வீடுகள் போன்றவற்றிற்கு பாதுகாப்பு Kamera, Alarm , satelliten tv anlagen பொருத்துதல், பழுது பார்த்தல் போன்றவற்றிற்கும்.

இன்றே நாடுங்கள்...

Kaneen Electronics

Handy Nr: Schevenhoferweg 24 42111 Wuppertal

Tel: Handy Nr:01722931266 | 02053 423 740 Fax: 2053 423 741 Mobil: 0172 2931266 | www.kaneenelectronics.de | info@ kaneenelectronics.de

அனைவருக்கும் இனிய தைத் திருநாள் நல்வாழ்த்துக்கள்




ஆனந்தராணி பாலேந்திரா (UK)

கடந்த இதழில் 1976ஆம் ஆண்டு க.பாலேந்திரா நெறிப்படுத்தி நான் நடித்த 'மழை' நாடகப் பின்னணி, அதனுடைய கதைச் சுருக்கம், முதலாவது மேடையேற்றம் பற்றி எழுதியிருந்தேன்.

'மழை' நாடகம், அரங்கு நிறைந்த ரசிகர்கள் மத்தியில் மேடையேறிக் கொண்டிருந்தபோது நாடகத்தில் ஒரு கட்டத்தில் அப்பாவும் மேடையில் இருக்க, திருமணங்களைப் பற்றிய உரையாடலைத் தொடர்ந்து, நிர்மலா என்ற மகள் பாத்திரத்தில் நடித்த நான் டொக்டர் ஜேம்ஸிடம் ''I need a man (எனக்கு ஒரு ஆம்பிளை வேணும்) அது நீங்களாகக் கூட இருக்கலாம்'' என்று கூறும் வசனம் டொக்டர் ஜேம்ஸை மட்டுமல்ல சபையிலும் பலரை அதிர்ச்சிக் குள்ளாக்கியது என்றும் எழுதியிருந்தேன்.

44 வருடங்களுக்கு முன் ஒரு இளம்பெண் மேடையில் இந்த வசனத்தைக் கூறியது அது நாடகமாயிருந்தும்கூட பலருக்கு ஏற்றுக்கொள்ள முடியாத, சங்கடத்தைக் கொடுத்த ஒரு விடயமாக இருந்தது. நாடகம் முடிந்தவுடன் சிலர் என்னிடம் நேரடியாகவே ''இந்த வசனத்தை எல்லாருக்கும் முன்னாலை சொல்ல உமக்கு கூச்சமாய் இருக்கேல்லையா'' என்றும் ''உமக்கு வெக்கமில்லையோ'' என்றும் கேட்டார்கள். நான் பேசிய இந்த வசனங்கள் நாடகத்திற்கு எவ்வளவு முக்கியம் என்பது எனக்கு நன்றாகத் தெரிந்திருந்தது. சர்ச்சைகள் வரும் என்றும் தெரியும். எதையும் மனம் விட்டுப் பேசாமல் உணர்ச்சிகளை அடக்கப் பழகிக்கொண்ட எமது சமூகத்தில் (இது இன்றும் பல இடங்களில் நடக்கிறது) இந்த வசனங்கள் தாக்கத்தை ஏற்படுத்தியதில் வியப்பேதுமில்லை.

நாடகம் முடிந்து நான் அப்பா அம்மாவுடன் வீடு திரும்பியபோது, அம்மா மட்டும் என்னிடம் மெதுவாகக் கேட்டார் ''இந்த வசனம் கட்டாயம் பேசவேணுமோ'' என்று. அவர் ரசிகர்களோடு இருந்து நாடகம் பார்த்தவர். வேறு என்னவெல்லாம் அவர் காதில் விழுந்ததோ எனக்குத் தெரியாது. அவரும் சொல்லவில்லை. நானும் கேட்கவில்லை. ''இந்த வசனம் நாடகத்திற்குக் கட்டாயம்'' என்று மட்டும் நான் சொன்னேன். அதன் பிறகு அம்மா ஒன்றும் சொல்லவில்லை.

**'மழை' நாடகம் இலங்கையில் மட்டும் கொழும்பு, யாழ்ப்பாணம், பேராதனை, திருகோணமலை ஆகிய இடங்களில் 12 தடவைகள் மேடையேறியது. எல்லா மேடையேற்றங்களிலும் நான் நடித்தேன். எல்லா மேடைகளிலும் சர்ச்சைக் குள்ளான வசனங்களைப் பேசினேன். சில மேடையேற்றங்களின் பின்னர் நான் பேசிய ''I need a man அது நீங்களாவே இருக்கலாம்'' என்ற வார்த்தையை கொச்சைப்படுத்தி ''நான் வரவா'' என்று என்னிடம் கேட்டவர்களும் உண்டு. நான் அதைப்பற்றிப் பெரிது படுத்தவில்லை.**

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலும் 'மேடை நாடக வரிசையில்' 'மழை' நாடகம் அப்போது அங்கு நாடகத் தயாரிப்பாளராகப் பணியாற்றிய கே.எம்.வாசகர் அவர்களால் தயாரிக்கப்பட்டு 23-09-1978 இல் ஒலிபரப்பாகி பெரும் வரவேற்பைப் பெற்றது. நாங்கள் நால்வருமே நடித்தோம். வானொலிக்காக பாலேந்திரா இதனை ஒரு மணித்தியாலமாக சுருக்கிய போதும் நான் பேசிய



## 'மழை'- 1976

சர்ச்சைக்குரிய வசனங்கள் எதுவுமே நீக்கப்படவில்லை.

1982ஆம் ஆண்டு நானும் பாலேந்திராவும் திருமணம் செய்து இலங்கையை விட்டு புலம்பெயர்ந்த பின்னர் லண்டனில் 'மழை' நாடகம் மீள் தயாரிப்பாக பாலேந்திராவினால் தயாரிக்கப்பட்டு 09-11-1985ல் மேடையேறியது.

இதில் நானும் பாலேந்திராவும் அதே பாத்திரங்களில் நடித்தோம். எம்முடன் மு.நேமிநாதன், தே.ரங்கன் ஆகியோர் நடித்தார்கள். அந்த நேரத்தில் நாடக நிகழ்வினை விளம்பரப்படுத்துவதற்கு தமிழ் பத்திரிகைகள், வானொலி தொலைக்காட்சி எதுவுமே லண்டனில் இருக்கவில்லை. கைத்தொலைபேசி கூட பெரிதாக பாவனையில் இல்லை. நாடக மேடையேற்றத்திற்கான துண்டுப் பிரசுரங்களை வடிவமைத்து அந்த நேரத்தில் இருந்த ஓரிரு கோயில்களில் அவற்றை விநியோகித்தும் சிலருக்கு தபாலில் அனுப்பியும் எமது நாடக மேடையேற்றம் பற்றி அறியப்படுத்தினோம். மண்டபம் நிறைய ''பார்வையாளர்கள்'' வந்தது எமக்கு மிக மகிழ்ச்சியாக இருந்தது. 'மழை' நாடகத்துடன் 'பார்வையாளர்கள்' என்ற நாடகமும் பாலேந்திராவின் நெறியாள்கையில் அன்று மேடையேறியது. இந்த நாடகத்திலும் நான் நடித்தேன். நான் ஒருவர் மட்டுமே பெண் நடிகை.

தொடர்ந்த நாடக மேடையேற்றங்களே தீவிர நாடக இயக்கத்தை வலுப்படுத்தும் என்பதில் பாலேந்திராவிற்கு அசைக்க முடியாத நம்பிக்கை. அந்த வகையில் 'மழை' நாடகம் இலங்கை, கனடா, ஒஸ்ரேலியா, நோர்வே, பிரான்ஸ், ஜேர்மனி, ஹொலன்ட், சுவிற்சலன்ட், இந்தியா ஆகிய நாடுகளில் மேடையேறியது. 40 தடவைகளுக்கு மேல் மேடையேறிய இந்த நாடகத்தில் நானும் பாலேந்திராவும் அதே பாத்திரங்களிலேயே நடித்தோம். அப்பா, டொக்டர் பாத்திரங்களில் வேறு நடிகர்கள் மாறி மாறி நடித்தார்கள்.

புலம்பெயர் நாடுகளில் 'மழை' நாடகத்தை மேடையேற்றியபோது சர்ச்சையான வசனங்கள் ரசிகர்கள் மத்தியில் அவ்வளவாக பெரிய சலசலப்பை ஏற்படுத்தவில்லை என்றுதான் கூறுவேன்.

'மழை' நாடகத்தை சுவிற்சலன்ட்டில் 1994 இலும் பின்னர் சென்னையில் 2010இலும் மேடையேற்றியபோது இந் நாடகத்தை எழுதிய பேராசிரியர் இந்திரா பார்த்தசாரதி அவர்கள் வந்திருந்து பார்;த்து பாராட்டியது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. சுவிற்சலன்ட்டில் நான்கு நகரங்களில் எமது நாடக விழாக்கள் அடுத்தடுத்து நடைபெற்றபோது அவர் எம்மோடு தங்கியிருந்து எமது எல்லா நாடகங்களையும் பார்த்து ரசித்தார்.

அடுத்த பதிவில் நான் நடித்த, ஈழத்து எழுத்தாளரும் கவிஞருமான தர்மு சிவராம் எழுதிய ''நட்சத்திரவாசி'' நாடக அனுபவங்களை பகிரவுள்ளேன்.



அனைவருக்கும் இனிய தைத் திருநாள் நல்வாழ்த்துக்கள்

# யாழ். மருதனார்மட சந்தையில் கோரோனா தோற்று

## மக்கள் விழிப்பு, சமூகப்பொறுப்புடன் செயற்படவேண்டும்



வலி கிழக்கு மக்களுடன் நெருங்கிய தொடர்புடைய மருதனார்மடம் சந்தையில் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதால் வலி கிழக்கு மக்கள் அதிக சமூகப் பொறுப்புணர்வை வெளிப்படுத்த வேண்டும் என தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

எமது வலிகாமம் கிழக்கில் இருந்து பெருந்தொகையான விவசாய உற்பத்திப் பொருட்கள் மருதனார் மடம் சந்தைக்கே எடுத்துச்செல்லப்படுகின்றன. எமது பிரதேச சபையின் எல்லைப்பகுதியே மருதனார் மடம். வலி கிழக்கில் 18 ஆயிரம் விவசாயிகள் உள்ள நிலையில் அவர்களில் அதிகளவானோர் சந்தைத்தேவைக்கு மருதனார் மட சந்தையுடன் நேரடி தொடர்புபட்டுள்ளனர். இதனால் வலிகாமம் கிழக்குப் பகுதி மக்கள் உயர்ந்த அளவில் சமூகப்பொறுப்பினை கொண்டு செயற்பட்டால் மட்டுமே தம்மையும் ஏனையோரையும் பாதுகாக்க முடியும்.

தற்போது வலிகாமம் கிழக்கு பிரதேசத்தில் மருதனார்மடம் சந்தையுடன் தொடர்புபட்ட 25 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக பொது சுகாதாரவைத்திய அதிகாரி பணிமனை தெரிவித்துள்ளது.

எமது பிரதேச மக்களில் பலர் மருதனார்மடச்சந்தையுடன் நேரடியாகத்தொடர்பு பட்டுள்ள நிலையில்



நிலைமை சிக்கலடைந்தால் ஒத்துழைப்புடன் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றி கோப்பாய் பிரதேச பொது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் சிவசங்கரியுடன் பேசியுள்ளேன். எதிர்வரும் சுகாதாரத் துறை முடிவுகளின் அடிப்படையில் எமது பிரதேச சபை தொழிற்படும்.

சந்தையுடன் தொடர்புபட்டவர்களை கண்டறிவது கடினமான பணியாகும். வியாபாரிகளை இலகுவில் கண்டறிய முடியுமாயினும் சந்தைக்கு விற்பனைப்பொருட்களைக் விற்க வாங்கச் சென்று திரும்பியவர்களை அடையாளப்படுத்துவது சவாலான பணியாகும். அவ்வாறு தொடர்புபட்டவர்கள் முதலில் கிராம சேவகர்களிடம் தங்களைப் பதிவு செய்துகொள்ளுங்கள். அயலில் எவராவது தம்மை வெளிக்காட்டாது இருப்பார்கள் ஆயின் அதுபற்றி பொதுசுகாதாரவைத்திய அதிகாரி பணிமனைக்கு நேரடியாக அறிவிக்கமுடியும். பிரதேச சபையின் கவனத்திற்கும் கொண்டு



வரப்படும் போதும் அது சுகாதாரத்தரப்பினருக்குப் பரிமாறப்படும்.

ஏலவே சுகாதார அதிகாரிகள் எழுமாறாக தொற்றுப் பரிசோதனையில் ஈடுபட்டு வருகின்றனர் அவர்களுக்கு சகல வழிகளிலும் நிறுவனங்கள், அதிகாரிகள், மக்கள் ஒத்துழைக்க வேண்டும். கொவிட் சோதனைக்கு நானும் உட்பட்டேன். அது ஒன்றும் கஸ்டமாது அல்ல. வலி கிடையாது. சாதாரணமாக எறும்பு கடித்ததைப்போலவே இருந்தது. எனவே யாரும் அச்சம், அலட்சியம் காரணமாக இருந்துவிடக்கூடாது. எனவே நாம் சமூகப்பொறுப்புணர்வை நிலைநிறுத்தி செயற்படுவோம் என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத்த தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.





# எத்தனை கோடி இன்பம் வைத்தாய் 01

கலாசூரி
திவ்யா சுஜேன் (இலங்கை)

## திடமாயுறைகின்றான் திருக்கேதீஸ்வரத்தான்

மனிதனின் ஐம்புலன்களையும் ஒடுக்கி, அமைதியெனும் ஒற்றை புள்ளியில் குவித்து, ஆனந்தம் என்னும் பரம வெளியில் உலவ விடும் வல்லமை கலைகளுக்கே உண்டு என்று ஓர் கலைஞனாய் பலமுறை உணர்ந்திருக்கிறேன். வாழ்நாளில் மறக்க முடியாத பரமானந்த மோன நிலையை தொட்டு விட்டு வந்த வியப்பான தருணங்களை அனுபவித்தவளாய், அதில் இருந்து மீளாதவளாய் என்னுள் உணர்ந்த சுகானுபவத்தை சொல்லிச் சொல்லி மாளாதவளாய், என் தாய் மொழி ஸ்நேகத்தை துணை கொண்டு எழுத்துருவாக்க முயல்கிறேன். ‘‘எத்தனை கோடி இன்பம் வைத்தாய்’’

அபிநயக்ஷேத்ரா நடனப்பள்ளியின் புண்ணிய கைங்கரியமாக திருக்கேதீச்சரத்தின் கேது சந்நிதி நிர்மாண பணிக்காக நிதி திரட்டும் நிகழ்வாய் வரலாற்று சிறப்பாக அமைந்தது திருக்கேதீஸ்வர ஆலய ஸ்தல புராண நாட்டிய படைப்பு .

### திடமாயுறைகின்றான் திருக்கேதீஸ்வரத்தான்

புராதன பெருமை கொண்ட இலங்கையின் அணிகலனாக திகழும் திருக்கேதீஸ்வர ஆலயத்தை தொன்று தொட்டு இன்று வரை எத்தனை மகான்கள் வழிபட்டு வந்தனர் என்றும், இன்று நாம் இந்த பிறப்பில் வழிபட எத்தனை கோடி புண்ணியம் பண்ணியிருக்க வேண்டும் என்பதையும் எடுத்து காட்டுவதே இக்கதையின் சாரம். புண்ணியோத்தமமான இலங்கையின் சிவன் கோவில், இயற்கை அனர்தங்களாலும், அந்நியர் படையெடுப்பாலும், உள்நாட்டு யுத்தத்தினாலும், பல முறை அழிந்தாலும் தாமாக வந்து அமைந்த சுயம்பு லிங்கம் மட்டும் திடமாய் உறைய, சைவர்கள் உள்ளத்திலும் திடமாய் உறைகின்றார் திருக்கேதீஸ்வரத்தான் என்னும் ஆதாரத்தை கருத்தில் கொண்டு நாட்டிய படைப்பிற்கான தலைப்பு இடப்பட்டது.

இதுவரை காலமும் இலங்கை கலையுலகு கண்டிராத வகையில் இந்த நாட்டிய நாடகம் அமையவிருப்பதை நான் முதலில் தெரிந்திருக்கவில்லை. ஆனால் மூச்சு காற்று கூட பேரொலி என்று எண்ணும் அமைதியில் 90 நிமிட நாட்டிய படைப்பாக, 01.03.2020 அன்று சுமார் 1200 பார்வையாளர்களோடு இலங்கையில் புதிய கதிரேசன் மண்டபத்தில் முதன் முறையாக மேடையேற்றப்பட்டது.

1. பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான ஆலயம். ஆதலால் 5 காட்சி அமைப்புகளில் புராண கதைகள் தொகுக்கப்பட்டிருந்தது. ஆறாவது காட்சில் தற்கால சந்ததியினர் கண்ட நிலவரத்தை காட்சிப்படுத்தினோம். இந்த 6 காட்சிகளின் சாரத்தையும் புஷ்பாஞ்சலியில் பொருளடக்கம் போல் நாட்டிய அமைப்பு செய்திருந்தோம். இது மேடை நிகழ்ச்சி என்பதை கடந்து கைகளில் ஓர் புத்தகத்தை வாசிக்க தந்தது போல இருந்தது.





2. கோவில் உருவான புராண கதை, திருக்கேதீச்சரம் பெயர் வரக் காரணம் , திருக்கோவிலை முதன் முதலாக கட்டிய மாகாதுவட்டான் , ராவணன், ராமன், அகஸ்தியர் என இத்திருக்கோயிலை வழிபட்டோர் பட்டியல், தேவார பதிகங்களும் அவை காலம் தோறும் பரவிய சிறப்பும் என காட்சிகள் காலக்ரமமாக அமைக்கப்பட்டிருந்தன. வெறுமனே நாட்டிய நாடகமாக இல்லாது, தேடி ஆராய்ந்து, பிழையின்றி தொகுத்து கனத்த ஆராச்சியின் செறிந்த சாரமாய் அமைந்தது.

3. முதலாவது காட்சியில் மேரு மலையை சுற்றிக்கொண்ட ஆதிசேஷன், இரண்டாம் காட்சியில் மோஹினி , மூன்றாவது காட்சியில் மாகாதுவட்டான், நான்காவது காட்சியில் ப்ரஹ்மஹத்தி தோஷம் நீங்கப் பிரார்த்தித்த ராமன், ஐந்தாவது காட்சியில் அர்த்தநாரீஸ்வரர் என ஒவ்வொரு காட்சியிலும் நெஞ்சள்ளும் நாட்டிய அமைப்பு வழங்கப்பட்டிருந்தது.

4. மேருமலையின் ஓர் கூறு மன்னார் மாவட்டத்தில் வீழ்ந்ததும், கோவில் கட்டப்பட்ட காட்சியும், பின் போர்த்துக்கீசர் உடைத்ததுவும், போர் காலத்தில் காடாகி கிடந்தாலும் ஒற்றை விளக்கு மட்டும் ஒளி வீசி இருந்த காட்சியும் ஒளித்திரையில் வழங்கி தற்கால தொழில்நுட்ப வசதிகளை நம் பாரம்பரிய கலைகளோடு கோர்த்து ஒன்றை ஒன்று மிஞ்சாத வகையில் செவ்வனே ஒழுங்குபடுத்தப்பட்டிருந்து.

5. இவை அனைத்திற்கும் மகுடமாக குறிப்பிடவேண்டியது ராஜ்குமார் பாரதி ஐயாவின் இசை. இலங்கை கலை உலகிற்கு அவரது இசையில் வெளிவந்த முதல் படைப்பு இதுவே ஆகும். கதைக்கேற்ற இசையாகம், கதாபாத்திரத்திற்கு ஏற்ற இராகங்கள் [உதாரணமாக மோகினி– மோகனாங்கி , ராமர்– சூரியகாந்தம் ] கர்நாடக சங்கீதத்தில் பிரபலமான பல்லவி அமைப்பினை ராவண, மண்டோதரி காட்சியில் புதைத்த பாங்கு, ஒல்லாந்தர் , போர்த்துக்கீசர் காட்சிகளில் மேலைத்தேய இசை பாணி , ஐந்து ஜாதிகளில் ஐந்து இராகங்களில் பஞ்ச ரத பவனி, மூர்த்தி சிறப்பை சொல்ல முப்பது தேவாரங்களில் இருந்தும் கோர்த்து சங்கீர்ண சாபு தாளத்தில் அமைத்த பாடல், நாவுக்கரசர், மாணிக்கவாசகர் திருமுறைகள், மாதுவட்ட அருளிய திருக்கேதீஸ்வர அஷ்டகம், அகஸ்தியர் அருளிய திருக்கேதீஸ்வர சதகம் என அடுத்தடுத்து சரமாரியாக இதயத்தை கூறு போட்டது அந்த மகானின் இசை.

எத்தனை ஆயிரம் ஆயிரம் நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட திருக்கேதீச்சர அஷ்டகம் இதுவே முதன் முறையாக நாட்டிய வடிவில் வெளிக்கொணரப்பட்டது என்று எண்ணுகிறேன்.

28 ஆம் பக்கம் பார்க்க...



அனைவருக்கும் இனிய தைத் திருநாள் நல்வாழ்த்துக்கள்


Sari 1
Sari 1
தரமான
ஆடைகள்
நியாயமான
விலையில்
பெற்றுக்
கொள்ளலாம்
இனிய
தைப்
பொங்கல்
வாழ்த்துக்கள்
எம்மிடம் தங்க நகைகளும்
பெற்றுக்கொள்ளலாம்
Taunusstr.49, 60329 Frankfurt am Main
0152 1923 9663
Opening Hours: Mon- Sat 10.00 am- 20.00 pm
https://www.facebook.com/sari1fashionhouse


Frankfurt நகரில்...
New
ASIA LAND
இனிய
தைப்
பொங்கல்
வாழ்த்துகள்
Frankfurt (Main)
Hauptbahnhof
முன்பாக 50 மீற்றர்
தொலைவில்
அமைந்துள்ளது
மளிகைப்பொருட்கள் மற்றும்
மரக்கறி, கடலுணவுப்பொருட்கள்
அனைத்தும் என்றும் சிறந்த
விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
TAUNUSSTRASSE 49
60329 FRANKFURT
Tel: 069 23 35 35 | Fax: 069 24009760

# மலையகத்தில் ஊடுறுவும் கோரோனா...



**மாலினி மோகன்**
(கொட்டகலை– இலங்கை)

மலையகம் ஒரு மகிழ்ச்சி நிறைந்த திடல். இதன் இயற்கை அம்சங்களை மனநிறைவோடு ரசிக்காதவர் எவருமில்லை. சுற்றுலா பயணிகளை சுண்டி இழுக்கும் பேரழகி தான் மலையகம் எனும் எழிலரசி. இப்படிப்பட்ட அழகிய மலையகம் இன்று ஆர்ப்பரிப்பு அடங்கிபோய சீண்ட ஆளின்றி அநாதையாய் கொரோனாவினால் கூண்டுக்கிளி போல் பதுங்கிவிட்டது.

தெருக்கள் எங்கும் அமைதியாய் காட்சிகொடுக்க ஆட்கள் நடமாட்டம் குறைந்து கடைதெருக்கள் கதவுகள் மூடப்பட்டு பொருட்கள் வீடுகளுக்கு door delivery செய்யப்படுகிறது. இது நகர்புறங்களில் மட்டுமே நடைமுறைப்படுத்தப்பட, தோட்டப்புறங்களில் வசிக்கும் மக்களுக்கு பொருட்களை கொண்டு விற்பனை செய்யும் நடைமுறை மிக மிக குறைவாகவே உள்ளது. இப்படியான நிலைமையில் எம் மலையக மக்கள் வெளியில் நடமாட வேண்டிய நிலையில் தனிமைப்படுத்தப்பட்டிருப்பது என்பது முடியாத காரியம்.

**நெருக்கமான லயங்களே மலையகத்தின் அடுக்கு மாடி வீடுகளாக, அங்கே ஒருவருக்கொருவர மூச்சி விடும் தூரத்தில் தான் முகங்கள் காட்சியளிக்கும். இப்படி இருக்கையில் கொரோனாவை விரட்டியடிக்க 1 மீட்டர் இடைவெளி பேணுவது எப்படி சாத்தியமாகும். தோட்டப்புறங்களில் இரு வீடுகளை இணைக்கும் ஒற்றை சுவரும், பொதுவில் அமைக்கப்பட்ட மலசலகூடங்களும், பல லயங்களுக்கு ஒரு நீர்குழாய் என அமைக்கப்பட்ட விடயங்களும் சமூக இடைவெளியை எப்படி ஏற்படுத்தும்.**

மலையகத்தின் பொது சுகாதார கட்டமைப்பு வசதிகள் இன்னும் பூரணப்படுத்தாத நிலையில் மக்கள் சுகாதாரம் பேணுவதும் சாத்தியமற்ற நிலையிலேயே உள்ளது. முதலாவது தொற்று கடந்த மார்ச் மாதம் ஏற்பட்டு முழு நாடும் முடக்கப்பட நிலையில் மலையகத்தில் எவ்வித பாதிப்புமின்றி எம் மக்கள் இருந்தனர்.அதே போன்று கடற்படையினரினூடாக தொற்று பரவியபோதும்நம்மக்கள்இக்கட்டுக்குள்



சிக்கவில்லை ஆனால் மாறாக இபோது கொரானாவின் இரண்டாம் அலையில் மலையகமும் சிக்கிதவிக்கின்றது. இதனால் மக்களின் இயல்பு நிலை சற்று ஆட்டம் கண்டுள்ளது. நான்கு சுவர்களுக்குள் உள்ளே மனிதனின் வாழ்வு சிக்கிக்கொண்டுள்ளது. கொரோனா தடுப்பு சுவராய் இருக்கும் மட்டும் இது தொடர்ந்து கொண்டே இருக்கும். மகிழ்ச்சி நிறைந்த மலையகம் இன்று மந்த நிலையில் கொரோனாவின் வீரியத்தை விரட்டியடிக்க போராடிக்கொண்டிருக்கிறது.

சமூக தொற்று பரவிவிடும் என்ற அச்சம் தலைதூக்கியுள்ளது. உயிராபத்து உணரப்படுகின்றது. ஏனெனில் தலைநகரம் அபாய பிரதேசமாக இனங்



**மூச்சி விடும் தூரத்தில் தான் முகங்கள் லயங்களில் காட்சியளிக்கும்**

காணப்பட்டுள்ள நிலையில் அது அங்கிருந்து வந்தவர்களால் மலையகத்துக்குள்ளும் ஊடுறுவி இருக்கிறது.

மினுவாங்கொட ஆடைதொழிற்சாலைகளிலும்,பேலியகொட மீன்சந்தையிலும் மலையக இளைஞர்கள் பெருமளவில் தொழில்புரிகின்றனர். இவர்களினூடாகவே சாமிமலை,மஸ்கெலியா, கந்தப்பளை, புபுரஸ்ஸ, மாத்தளை போன்ற பகுதிகளுக்கு பரவியுள்ளது. தொற்றின் தீவிரம் உணராமல் கிடைக்கின்ற சகலவழிகளையும் பயன்படுத்தி நம் இளைஞர்கள் மலையகத்திலுள்ள தமது இருப்பிடங்களுக்கு கிளம்பி சென்றுள்ளனர். என்றாலும் பாருங்கள். தீபாவளிக்கு வராதீர்கள் சமூகதொற்றை கட்டுபடுத்த உதவுங்கள் என பல தரப்பிலிருந்தும் விடுக்க பட்ட வேண்டுகோளையும் புறந்தள்ளி பலர் பல்வேறு உபாயங்களை கைகொண்டு தோட்ட பகுதிகளுக்கு வந்துள்ளனர். வந்தது மாத்திரமன்றி அதனை மிக பெரிய வீரபிரதாபமாக சொல்லிக்கொண்டும், கோவில், நண்பர்கள், உறவினர்கள் வீடுகள், கடைதெருக்கள் என சுற்றிக் கொண்டு திரிகின்றனர். உழைத்து வந்த பணத்தில் தீபாவளியை கொண்டாடியும் தீர்த்தனர்.

எவ்வளவு அபாயத்தை நாம் எதிர் கொண்டிருக்கின்றோம் என்று தெரிந்தும், அரசாங்கம் மற்றும் சுகாதார திணைக்களம் பல்வேறு பாதுகாப்பு நிபந்தனைகளை விதித்தும் மலையக மக்களின் காதுகளுக்கு மட்டும் அது எட்டாதது போல் எமக்கென்ன நேரும் என்ற அகந்தையில் மலையகத்தின் பல்வேறு பகுதிகளிளும் உள்ள மக்கள் தீபாவளியை எந்தவித பயமுமின்றி கொண்டாடியமை வியக்கவைத்து. சமூக இடைவெளி இன்றி புடவை கடைகளிலும், மதுபான சாலைகளிலும் நிறைந்து வளிந்தனர்.

மேலும் கொரோனாவின் முதல் கட்டத்தின் போதும் அரசாங்க சேவையாளர்கள் அனைவரும் வீட்டிலிருக்க, பெரும்பாலான தோட்டத் தொழிலாளிகள் மட்டும் கொழுந்து பறித்து நாட்டுக்கு வருமானத்தை உழைத்து கொடுத்தனர். இரண்டாம் மூன்றாம் அலைகளின் போதும் இவர்கள் வெளியில் நடமாடி நாட்டுக்கு கொரோனாவுடன் போராடி உழைத்து கொடுத்து கொண்டிருக்கிறார்கள். இப்படி இருக்கும் போது தோட்டத்தொழிலாளிகள் நிறைந்து வாழும் மலையகத்தை கொரோனா வெகுவில் தாக்கி செல்வது சாத்தியமானதே.

இலங்கையில் இதுவரையில் 32,000 க்கும் அதிமான கொரோனா நோயாளர்கள் உறுதி செய்யப்பட்டதுடன், 24,500 க்கும் அதிமான நோயாளிகள் குணமடைந்துள்ளதுடன்,



150 பேர் இன்றுவரையில் உயிரிழந்துள்ளனர். எம் மலையகத்தில் ஹட்டன் பகுதியில் ஒக்டோபர் மாதத்தில் கொரோனா தொற்றாளர்கள் கண்டு பிடிக்கப்பட்டு ஹட்டன் பகுதி முழுமையாக தனிமைப்படுத்தப்பட்டது. அவ்வாறே தலவாக்கலை, கொட்டகலை, மஸ்கெலியா, பொகவந்தலாவ, பகுதிகளிலும் பல கிராமங்கள், தோட்டபுறங்கள் தனிமைப்படுத்தப்பட்டது. இதுவரையில் மலையகத்தில் மட்டும் பல கொரோனா தொற்றாளிகள் கண்டு பிடிக்கப்பட்டு PCR பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு அந்த பகுதிகள் முழுமையாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. மலையக பெருந்தோட்டத்துக்குள் கொரோனா புகுந்து விட்டால் கண்ணாடி பாத்திரகடைக்குள் புயல் வந்தது போலிருக்கும். இலங்கையில் மட்டுமல் எமக்கு கைகொடுக்கும் புலம்பெயர்ந்த தமிழ் உறவுகளையும் இக்கொரோனா தாக்குவது ‘யாரிடம் நோவோம் யார்க்கெடுத்துரைப்போம்’ என்று ஏங்கவைக்கிறது.



அனைவருக்கும் இனிய தைத் திருநாள் நல்வாழ்த்துக்கள்



# முகமூடி மனிதர்களுக்கு ஏன் மேலும் ஒரு முகக்கவசம்!





சேவியர்
(தமிழ்நாடு)

## நடுப்பக்கம்

தங்கத்தை உலையில் போட்டு அதீத சூடாக்குவார்கள். அப்போது அதிலுள்ள துருக்களெல்லாம் விலகிப் போக, சுத்தமான தங்கம் பிரித்தெடுக்கப்படும். அனலடிக்கும் வெப்பம் நல்ல தங்கத்தை அடையாளம் காட்டும். கசடுகளை அதுவே பிரித்துக் காட்டிவிடும்.

ஒரு அழுத்தமான சூழலுக்குள் போகும்போது தான் உண்மையான நண்பர்களை அடையாளம் காண முடியும். சுயநலமெனும் துருக்கள் தங்கியிருக்கிறதா ? அன்பெனும் அறம் நிரம்பியிருக்கிறதா என்பதையெல்லாம் அழுத்தம் நமக்கு அறிவித்து விடும். எத்தனை சோதனைகளுக்கு உள்ளே நுழைந்து சென்றாலும் தங்கமாய் ஜொலிக்கும் குணமுடையவர்களே மானுடத்தை இன்னும் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தக் கோவிட் காலமும் நமக்கு பல முகமூடிகளை நமக்கு அடையாளம் காட்டியிருக்கிறது. கிருமிகளுக்காய் போடுகின்ற முகக் கவசம் அல்ல, அந்த மாஸ்க் நம் உயிரைக் காக்கிறது. ஆனால் சமூக விரோதக் கிருமிகள் தங்கள் முகத்துக்கு போடுகின்ற முகமூடி நமது உயிரை வலுக்கட்டாயமாய்ப் பறித்து எடுக்கிறது.

பசுத்தோல் போர்த்திய ஓநாய்களின் நடமாட்டம் இந்த கோவிட் காலத்தில் நிறையவே ஓடித் திரிவதைக் காண முடிகிறது. மனித நேயத்தின் துளி கூட இல்லாத கதைகள் இந்த பேரிடர் காலங்களில் நமக்குப் பேரிடியாக வந்து விழுந்திருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

கோவிட் நோயாளிகளிடையே தீவிரமாய்ப் பணியாற்றுகிறார் ஒரு மருத்துவர். தனது குடும்பம், உறவுகள், எல்லாரையும் விட்டு விட்டு பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்காய்ப் பணியாற்றுகிறார் அவர். கடைசியில் வாளெடுத்தவன் வாளால் மடிவான் என்பது போல, கிருமியை விரட்டிக் கொண்டிருந்தவர் கிருமியாலேயே தாக்கப்பட்டார். தனது இளம் வயதிலேயே உயிரையும் இழந்தார். ஆனால் அவரது உடலை அடக்கம் செய்யக் கூட மக்கள் அனுமதிக்கவில்லை. தங்களுக்காய் உயிரைத் தியாகம் செய்த அவருடைய குடும்பத்தையும் அவமானப் படுத்தினார்கள். மனித நேயம் என்றால் என்ன விலை என கேட்கவும், சுயநல நத்தையோட்டுக்குள் அடங்கிக் கொள்ளவும் இந்த கிருமி அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தது.

### சில பொய்களுக்குள்ளும் உண்மை கசிகின்றன!

நோயின் பாதிப்புக்குள்ளாகி ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுகிறார். அவருக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. ஆனால் குணமாகவில்லை என அறிவிக்கப்படுகிறார். சில நாட்களில் அவர் இறந்து விடுகிறார். அவரது உடலில் அறுவை சிகிச்சை நடந்ததற்கான அடையாளம் இருப்பதாக புகார் எழுகிறது. உறுப்புகள் திருடப் பட்டதாய் அச்சம் எழுகிறது. வாட்சப்களிலும், சமூக ஊடகங்களிலும் அதே போன்ற பல செய்திகள் உலவுகின்றன. சில செய்திகள் பொய்களுக்குக் கட்டிய சிறகுகளாய் இருக்கலாம், சில உண்மைகளின் கசிவுகளாகக் கூட இருக்கலாம் எனும் அச்சம் நிலவுகிறது. எரிகிற வீட்டில் புடுங்கற வரைக்கும் லாபம், எனும் சுயநல மனநிலை நோயை விடக் கொடியதாய் இருக்கிறது.



எனது நண்பர் ஒருவருக்கு நோய் பாதிக்கிறது. அவர் மருத்துவமனை ஒன்றுக்குச் செல்கிறார். பெரிய தனியார் மருத்துவமனை. ஐந்து இலட்சம் அட்வான்ஸ் கட்டச் சொல்கிறார்கள். கட்டுகிறேன், இப்போ அட்மிட் பண்ணுங்க பணம் ஏற்பாடு பண்ணிட்டு வரேன் என்கிறார் மனைவி. ‘அதெல்லாம் முடியாதும்மா, பணம் கட்டினா அட்மிட் பண்றோம், இல்லேன்னா கிளம்புங்க – நிறைய பேஷண்ட்ஸ் வெயிட்டிங்ல இருக்காங்க’ என்கிறது மருத்துவமனை. அவர் அங்கிருந்து அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படுகிறார். மருத்துவமனைகள் தங்கள் கைகளில் சாவுக்கான சானிட்டைசர்களை தடவிக் கொள்கின்றன.

சொல்லப் பட்ட நிகழ்வுகள் எல்லாமே உண்மையும், உண்மை சார்ந்தவைகளும் தான். நோய் பரவாமல்

17 ஆம் பக்கம் பார்க்க...



அனைவருக்கும் இனிய தைத் திருநாள் நல்வாழ்த்துக்கள்

இருக்க முகத்துக்கு மாஸ்க் போடுங்கள் என்கிறார்கள். ஏற்கனவே முகமூடிகளுக்குள் முகத்தைப் புதைத்துக் கொண்டவர்களுக்கு புதிதாய் மாஸ்க் எதற்கு என நாம் வியக்கிறோம்.

**மனிதர்களின் முகமூடிகளைக் கிழித்து எறிகிறது மாஸ்க்!**

எத்தனை மக்கள் சாகிறார்கள் என்பது முக்கியமில்லை ஒரு மருத்துவப் போருக்கான ஒத்திகை இது என ஆய்வுகளை சமர்ப்பிப்பவர்களும் உண்டு. பயமுறுத்தும் பயோ வார் தான் இது என சாதிப்பவர்களும் உண்டு. உயிர்களை ஒன்று, இரண்டு என எண்ணிக்கையில் பார்க்கின்ற சர்வாதிகார சிந்தனை. இத்தகைய கொடூர முகமூடிகள் சர்வதேசத்தின் மாபெரும் அவலம். எத்தனை மக்கள் சாகிறார்கள் என்பது முக்கியமல்ல, அதற்கான மருத்துவ உபகரணங்கள், தடுப்பு மருந்துகள், எல்லாமே எனது நிறுவனம் வழியாகச் செல்ல வேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டுமோ செய்வேன் எனும் கார்ப்பரேட் இலாபக் கணக்கு ! இத்தகைய தொழில் நிறுவனங்கள் மனுக்குலத்தின் மாபெரும் துயரம்.

எத்தனை மனிதர்கள் சாகிறார்கள், வேணும்ன்னா கொஞ்சம் அனுதாபப்பட்டுக்கலாம், ஆனால். நாம் எந்த விதத்திலும் பாதிக்கப்படக் கூடாது. நாம் பாதுகாப்பாய் இருப்போம் எனும் மனநிலையுடன் இருக்கிறார்கள் ஏராளம் மனிதர்கள். மனிதத்தை கம்பிகளுக்குள் கட்டிப் போட்டிருக்கும்

# முகமூடி மனிதர்களுக்கு ஏன் மேலும் ஒரு முகக்கவசம்!

இத்தகைய மனிதர்கள், மனுக்குலத்தின் மாறாக் கவலை.

வெளிச்சம் விழுகின்ற மேடைகளில் இவர்கள் அரிதாரம் பூசிய அவதாரங்கள். அப்பழுக்கற்ற சொக்கத் தங்கங்கள். ஆனால் உண்மையின் அறைகளிலோ இவர்களின் முகப் பூச்சுகள் உருகி வழிகின்றன. முகப் பூச்சுகளுக்கு உள்ளே உறைந்து



கிடக்கின்ற வன்மத்தின் முகம் வெளித்தெரிகிறது.

இவர்கள் முகமூடிகளை மாற்றி மாற்றி உண்மை முகங்களே அவர்களுக்கு அந்நியப்பட்டுப் போயிருக்கின்றன.

கண்ணுக்குத் தெரியாத கிருமியின் பாதிப்புகளுக்காய் போடுகின்ற முகக்கவசங்கள் ஆபத்தற்றவை. அவற்றைத் தேவைப்படும் போது கழற்றி விட முடியும். ஆனால் நிரந்தரமாய், தேவைக்கேற்றபடி மனிதன் அணிந்து கொள்கின்ற முகமூடிகள் ஆபத்தானவை. அவை மனிதத்தை மறுதலித்தவனின் போலி பிம்பங்கள்.

இந்த பெருந்தொன்றின் காலத்தில் பேரன்பு காட்டுபவர்களிடம் இருக்கிறது முகமூடியற்ற தெய்வீக முகம். ஏதோ கண்ணுக்குத் தெரியாத தேசத்திலுள்ள மக்களுக்காய் பிரார்த்தனை செய்வதில் அல்ல, கண்ணுக்கு எதிரே இருக்கின்ற ஏழைக்கு இரக்கம் காட்டுவதில் தான் அர்த்தமும் பயனும் உண்டு. இந்த பேரிடர் காலம் அத்தகைய நல்ல இதயங்களையும் அடையாளம் காட்டியிருக்கிறது.

வறுமையின் பிடியில் இருக்கும் மக்களுக்காய் உணவுகளைச் சமைத்துப் பரிமாறிய கனிவுள்ள மனங்கள் பல இந்த காலத்தில் அன்பின் அர்த்தத்தை அவனிக்கு உரக்கச் சொல்லியிருக்கின்றன. தெருக்கள் தோறும் திரிந்து, ஏழைகளுக்காய் இரங்கிய பலரை நான் நேரில் கண்டிருக்கிறேன். மனிதம் நீர்க்கலாம், தோற்காது ! என புரிய வைத்தவர்கள் அவர்கள்.

வேலைகளை இழந்து, வாழ்வாதாரத்தை இழந்த பலருக்காக பணமும், ஆறுதலும் அளித்த பலரை நாம் சந்திக்கிறோம். அன்பின் அட்சரேகை அறுந்து போகாமல், பூமிப் பந்தை இறுகப் பிடித்திருப்பவர்கள் அவர்கள் தான். அவர்களுடைய புன்னகையிலும், அர்ப்பணிப்பிலும் தான் இறைவன் இன்னும் பூமியை புதைக்காமல் இருக்கிறார்.

தங்கம் எப்படி அனலைக் கடந்து தனது அழகைக் காட்டுகிறதோ, அப்படி நாம் இந்த கடின காலத்தில் உண்மை முகத்தை அழகாய்க் காட்டவேண்டும். அந்த முகம் அன்பின் அகராதியாய், மனிதத்தின் விளைநிலமாய் இருக்க வேண்டும்.

பாறை எப்படி தனக்குள்ளிருக்கும் சிற்பத்தை உளியின் தாக்குதலுக்குப் பின் வெளிக்காட்டுகிறதோ, அப்படி இந்தப் பெருந்தொற்றின் உளியடி இதயங்களின் அழகை வெளிக்கொணர வேண்டும். அச்சத்தின் பிள்ளைகளாய் அல்ல, துணிச்சலின் தூதுவர்களாய் நாம் எழுந்து ஒளி வீச வேண்டும்.

இந்த பூமி அழகானது. இது வெறும் கரன்சிகளின் கட்டுகளுக்குள் அடைக்கப்பட வேண்டியதல்ல. நிறைவானவை வரும்போது குறைவானவை ஒழிந்து போகும். நிறைவு அன்பில் தான் வெளிப்படும். அந்த அன்பின் கதிர்களை நாம் விளையச் செய்ய வேண்டும்.

**நமது அவசரத் தேவை! சமூக இடைவெளி. அது உடலுக்குத்தான். மனதுக்கு! இடைவெளியற்ற சமூகமும் தேவை.**

07 ஆம் பக்கத் தொடர்ச்சி...

# என்னைக் காணும் போதெல்லாம் துரத்தியது!



ஒரு சவாலாக எடுத்து முயற்சி செய்யுங்கள், எதையும் முழு விருப்புடன் எதிர்கொள்ளுங்கள்! எல்லோரும் எல்லாவற்றையும் இலகுவாகக் கற்கலாம் என்று கூறவரவில்லை, ஆனால் அநேகமான விடயங்கள் எமது முயற்சியின்மையால் தான் முடியாமல் போகின்றது.

வெளிநாடுகளுக்கு வந்தவர்களிலும் சிலர் இன்னமும் மொழிப் பிரச்சனையில் இருந்து தப்பித்து ஓடிக்கொண்டு தான் இருக்கின்றார்கள், இலங்கையில் இருந்து இங்கிலாந்து வந்தவுடன் எனது ஆங்கிலப் பிரச்சனை திடீரென்று தீரவில்லை, அப்படியே தான் இருந்தது – எனக்கு[எமக்கு] நானே கற்பிக்க வேண்டிய நிலை...வானொலியிலும், தொலைக்காட்சியிலும் செய்திகளை ஒழுங்காகக் கேட்கும்படி இங்கிருந்த உடன்பிறவா சகோதர் கூறினார், அது மிகவும் உதவியாக இருந்தது ஆனால் சுவாரசியமாக இருக்கவில்லை! எனவே, நானாக ஒரு வழி கண்டுபிடித்தேன், எனக்கு விருப்பமான கால்பந்து விளையாட்டுகளை தவறவிடாது தொலைக்காட்சியில் பார்பேன், அடுத்தநாள் காலையில் அந்த விளையாட்டு அறிக்கையை [match report] மூன்று நான்கு பத்திரிகைகளில் வாசிப்பேன், இப்படி வாசிக்கும் போது கால்பந்துப் போட்டியில் நடந்த முக்கிய நிகழ்வுகளை ஒவ்வொருவரும் எப்படி விபரித்திருக்கின்றார்கள் என்பதை புரிந்துகொள்ள உதவியாக இருந்தது. இப்படி எமக்கு விருப்பமான விடயங்களுடன் கற்றலை இணைத்தால் அது இலகுவாக இருக்கும் என்பது எனது புரிதல். நிபுணர்களாக வராவிட்டாலும், நாளாந்த வாழ்க்கையை நம்பிக்கையுடன் நடத்த உதவியாக இருக்கும். பின்பு பார்த்துக் கொள்வோம் என்று தள்ளிப்போடாமல், பாடசாலை நாட்களிளிலேயே இயலுமானத்தைக் கற்றுக்கொள்ளுங்கள்.

ஆசிரியர்களுக்கு ஒரு வேண்டுகோள், உங்களுக்கு வேலைப் பழு அதிகம் என்பது யாவரும் அறிந்ததே, நீங்கள் எல்லா மாணவர்களையும் தனித்தனியே கவனிக்கமுடியாது – இயலுமாயின், உதவி தேவைப்படும், கேட்கத் தயக்கப்படும், என்னைப்போன்ற மாணவர்களை இனங்கண்டு, தனியே அழைத்து, அவர்களுக்கு தேவையான உதவியும், சிறிது உற்சாகமும் கொடுங்கள். [இக்கட்டுரை படித்து முடிக்கும் போது ஸ்ரீதேவி நடித்த English vinglish ஞாபகம் வந்தாலும் தப்பில்லை.–ஆர்.]

'Running away from any problem only increases the distance from the solution. The easiest way to escape from the problem is to solve it'






**அனைவருக்கும் இனிய தைத் திருநாள் நல்வாழ்த்துக்கள்**

**கரிணி** (ஜேர்மனி)

# ‘தப்பிப்பிழைத்தல்’





## மிகுந்த செல்லமும், பிள்ளைகளின் பரிதாபங்களும்

தாயும், சேயும் தான் அன்புக்கு உன்னத இலக்கணம் என்பார்கள். குழந்தை மீது பரிவும், பாசமும், கடமையும், பொறுப்பும் தாய்க்கு இலகுலேயே இருக்கின்றது. ஆனால் இயற்கையின் படி ஒரு குழந்தையானது அதன் ஆரம்ப பருவம் முதலே தன் பாதுகாப்பை உறுதிப்படுத்தல், தன் தேவைகளை பூர்த்தி செய்தல், தனக்கான இருப்பை சரிவர பேணல் என்பனவற்றை சரிவரக் கையாள்கிறது. அந்த தன்மை மாறுபடும் ஒவ்வொரு தருணத்தின் போதும் அழுதோ, ஆர்ப்பாட்டம் பண்ணியோ எந்த பிரயத்தனம் எடுபடுமோ அதை மேற்கொண்டு தன்னை தற்காத்து கொள்கிறது. இதற்கு அன்பு என்றோ பாசம் என்றோ எப்பெயர் கொடுத்தாலும் இயற்கை ஒவ்வொரு ஜீவனின் வாழ் விருப்பை பேண அதற்கு கொடுத்த ஒப்பற்ற விழிப்புணர்வு நிலை எனலாம். இது ஆன்ம விழிப்புணர்வு அல்ல. இது புறச் சூழலில் போட்டி போட்டு வாழ்தலுக்கான விழிப்புணர்வு.

எல்லா குழந்தைகளுமே இவ்வாறான எதிர்நீச்சல் இயல்போடு பிறக்கும் போது ஒவ்வொரு பருவத்திலும் அதன் ஆற்றல் மேம்படும் தருவாயில் போராடாமல் இலகுவில் கிடைக்கும் விடயங்களால் அவற்றின் எதிர்நீச்சல் இயல்பு மற்றும் இயற்கையோடு ஒன்றிணைதல் என்பது சிரமமாகிப் போகிறது. அடைத்து வைத்து தீனி போடும் புறொயிலர் கோழிக்கும், அலைந்து வேட்டையாடும் நாட்டுக் கோழிக்கும் பலத்தில் நேரெதிர் வித்தியாசம் உள்ளது. வாழ்தலின் நோக்கமே ‘தப்பிப்பிழைத்தல்’ அதாவது வாழ்தல் தான். அதற்கு தேவை எதிர்நீச்சல்

**‘ஐந்தில் வளையாதது**
**ஐம்பதில் வளையுமா’**

‘குட்டி நாய்க்கும் குழந்தை பிள்ளைக்கும் இடம் கொடுக்காதே’ என்பார்கள். அதிக செல்லம் கொடுத்து வளர்க்கப்படும் பிள்ளைகள் ஆபத்தான நிலமையில் சிக்கித் தவிக்கும் போது இன்னொருவர் உதவி தேவைப்படுகிறது. பொத்திப் பொத்தி வளர்க்கப்படும் ஒருவர் புறச்சூழலோடு எவ்வாறு வாழ்க்கைப் போராட்டத்தை ஏற்படுத்திக் கொள்ள முடியும்?

உதாரணமாக நெருப்பு என்றால் சுடும் என்று உணர்ந்து அறிவதை விட ‘நெருப்பு சுடும்’ ‘பனி குளிரும்’ என வாய் வார்த்தைகளால் மட்டுமே சொல்லிக் கொடுக்கும் போது அவை போன்றவற்றை அணுகுவதற்கு தமக்கு பக்குவம் இல்லை என்றே பிள்ளைகள் எண்ணுகின்றனர். அவர்கள் தம் நிலையை உணரும் சந்தர்ப்பங்களில் கூட தாம் அசைய முடியாத ஒரு கவசத்தை உணர்கின்றனர். அந்த கவசம் அன்பினால் உருவாக்கப்பட்டதால் உடைக்கப்பட வேண்டிய அந்த கவசம் உணர்ச்சி பிளம்புகளுக்கு உட்பட்டு உடைபடாமலே போய்விடுகின்றன.

முயன்று பெற வேண்டிய விடயங்களை எந்த வித சிரமமும் இன்றி கேட்க முன்பே வாங்கிக் கொடுத்தல், பரிசுகள், சொத்துக்கள் என பெற்றோர் தம்மை உருக்கி தம் சந்ததிகளுக்கு தங்களை அர்ப்பணித்து அவர்களின் எதிர்காலத்தில் அவர்கள் ஒரு ஆற்றல் குறைந்த மனிதர்களாக வாழ வழி வகுக்கின்றனர்.

பிறர் குழந்தைகளிடம் கேள்விகள் வினவும் போது அவர்கள் வாய் திறக்கும் முன்பே பெற்றோர்கள் இடைமறித்து பதில் சொல்வது மற்றும் சாதாரணமாக காலணிக்கு கூட நாடாவை கட்டி விடுவது போன்ற பற்பல செயல்கள் குழந்தைகளின் ஆற்றல்களை மழுங்கடிக்கின்றன. மாறாக இவ்வாறு செய்! எனக் கூறி அருகிலிருந்து பார்த்துக் கொள்வதும், அவர்களை பிறர் கேள்விக்கு பதிலளிக்க விட்டு மேலும் திருத்தம் தேவைப்படும் தருணங்களில் மட்டும் உதவி புரிவதும் அவர்களுக்கு நன்மை தருவதாக அமையும்.

பொதுவாக பெற்றோர் பலர் தாம் முடிந்தளவு பிள்ளைகளுக்கு நிழலாக இருப்பதையே விரும்புகின்றனர். அவர்கள் தம் வாழ்வின் நிலையாமையை உணருவதில்லை. முற்றுமுழுதாக பிள்ளைகள் தமக்காக பெற்றோர் இருப்பதை சௌகரியமாக நம்பும் வேளையில் ஏதாவது ஒரு காரணத்தால் அந்த பாதுகாப்பை அவர்கள் இழக்க நேரிடும் போது புறச்சூழலில் போராட முடியாமல் திணறிப் போய்விடுகின்றனர். இந்நிலை இன்று அதிகரித்து விட்டது. வெறுமனே பள்ளிப் படிப்பை மட்டுமே கொடுத்தால் போதாது. யுத்தம், இயற்கை பேரிடர், மற்றும் தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் இவை உயிர்வாழ்தலுக்கு கைகொடுப்பதை விட இயற்கையோடு ஒன்றிணைந்து வாழ்வில் எதிர்நீச்சல் போடும் ஆற்றலே உதவி நிற்கும். அந்த ஆற்றல் மனிதர்களுக்கு மட்டுமல்ல ஒவ்வொரு உயிரினத்திற்குமே அத்தியாவசியமாகும்.

எனவே எமக்கு பின் உருவாகின்ற சமுதாயம் சுயமாக செயற்பட வழிவகை செய்து கொடுக்க வேண்டும். நாம் பெற்றோராகவோ, பாதுகாவலராகவோ எப்படி எமக்கு அடுத்து வரும் சமுதாயத்தோடு தொடர்பு நிலையில் இருந்தாலும் அவர்கள் தமக்குள் இருக்கும் பேராற்றலை வெளிக்கொண்டுவர உதவி புரிய வேண்டும். அவர்களுக்கு கண்டிப்பாக உதவி தேவைப்படும் தருணங்களில் மட்டும் உதவி புரிந்து ஊக்குவிக்க



வேண்டும். பாடசாலைகளில் இவற்றை கடைப்பிடித்து வருகையில் வீட்டில் எதிர்மாறாக நடந்து கொண்டால் அவர்கள் குழப்பத்தோடு வாழப் பழகிக் கொள்வார்கள். எது சௌகரிகமோ அதை தேர்ந்தெடுத்து விடுவார்கள்.

தண்ணீரின் உயரத்திற்கு தாமரை வளர்வது போல் வாழ்வின் சவால்களுக்கு எதிர்நீச்சல் போடும் ஆற்றல் ஒவ்வொருவரிடமும் உண்டு. அதற்கான உத்வேகத்தை துண்டிக்கும் சூழல் உருவாகும் போது ஆற்றல் குறைந்து ஒடுங்கிப் போய்விட வாய்ப்புகள் அதிகம். மாறாக உன்னால் முடியும்! என்று தட்டிக் கொடுத்து சுயமாக வாழும் கலையை சொல்லிக் கொடுத்து அதற்காக அவ்வப்போது பாராட்டும், பரிசில்களும் வழங்கும் போது அவர்கள் அடுத்து வரும் சமுதாயத்தை அற்புதமானதொரு பரிணாமத்திற்கு கொண்டு செல்வார்கள்.






# சிவமயம் அல்ல! எல்லாம் பயமயம்!

Dr.நிரோஷன் தில்லைநாதன் (ஜேர்மனி)



எல்லாம் சிவமயம் என்று சொல்லுவினம், ஆனால் எனக்கு எல்லாம் பயமயம். காலம் உன்னைக் காலால் உதைக்கும் என்று காலமான பாரதி சொன்னவர். காலணி காலால் உதைத்தால் காலில் அடிபடும் என்ற பயம் எனக்கு. கவிதை பயம் எனக்கு, கதை பயம் எனக்கு, பீமன்னிண்ட கதைக்கும், அனுமன்னிண்ட கதைக்கும் பயம், உதைக்கும் பயம், சிதைக்கும் பயம். இப்படிப் பயத்தைப் பற்றி அடுக்கிக் கொண்டே போன தெனாலி படத்தில் வரும் கமல் ஹாசன் சொன்ன வசனங்களை நீங்கள் பார்த்து ரசித்திருப்பீர்கள், அல்லவா? உங்களுக்கு ஒன்று தெரியுமா? உண்மை சொல்லப் போனால் இந்த உலகில் வாழும் மக்களுக்குப் பல விதமான அச்ச உணர்வுகள் உள்ளன என்பது தான். அதிலும் சிலரின் அச்சங்கள் மற்றவர்களையும் அச்சம் கொள்ளச் செய்யும் என்பது தான் இதில் உள்ள சுவாரசியமே. அந்த வகையில் இன்று உங்களுக்கு 10 வகையான வித்தியாசமான அச்சங்கள் பற்றி அறியத் தருகின்றேன், படிக்கின் றீர்களா?

1. சாலையினைக் கடப்பதற்கான அச்சம் (அகைரோபோபியா, Agyrophobia) – சாலையினைக் கடப்பது, குறுக்குச் சந்திப்புகளைக் கடப்பது போன்ற இடங்களில் பயம் கொள்வது அகைரோபோபியா ஆகும். கைரஸ் எனும் கிரேக்க வார்த்தையில் இருந்து இந்த வார்த்தை எடுக்கப்பட்டது. இதில் பலவகைகள் உள்ளன. இதுபோன்ற பயம் இருப்பவர்கள் அதிக போக்குவரத்து வாய்ந்த நகரங்களில் வசிப்பது மிகவும் கடினம்.

2. சமையல் செய்வதற்கான பயம் (மஜைரோபோபியா, Mageirocophobia) – இது பெரும்பாலும் தனியாகச் சமைத்துச் சாப்பிடும் சிலருக்கு வரும் வாய்ப்புள்ளது. நன்றாகச் சமைக்கும் சிலரைப் பார்த்தால்கூட இவர்களுக்குப் பயம் ஏற்பட வாய்ப்புள்ளது.

3. பொம்மைகளைப் பார்த்தால் பயம் (பேடியோபோபியா, Pediophobia) – இது சில பயமுறுத்தும் வகையிலான பொம்மைகள் மட்டுமல்ல எந்த பொம்மையைப் பார்த்தாலும் ஏற்படும் ஒருவிதமான பயம். இதனால் வெளியிடங்களில் பொருட்களை வாங்கச் செல்லும்போது பல பிரச்சினைகள் ஏற்படும். இதுபோல் குழந்தைகளைப் பார்த்தும் பயம் கொள்வோருக்கு பேடோபோபியா என்று பெயர்.

4. சாப்பிடும்போது பேசுவதற்குப் பயம் (டெயிப்னோபோபியா, Deipnophobia) – சிலர் சாப்பிடும்போது பேசுவதற்குப் பயம் கொள்கின்றனர். சில சமுதாய ஒழுங்குமுறை கொண்ட மதிப்புமிக்க இடங்களில் சாப்பிடும்போது பேசும் பழக்கத்தினைத் தவிர்க்கின்றனர். பிற சாதாரண இடங்களில் இவர்களின் நிலை சிறிது கடினமானதுதான்.

5. கண்ணாடியைப் பார்த்து பயம் (எயிசோப்ட்ரோபோபியா, Eisoptrophobia) – இதுபோன்ற பய உணர்வுகள் பகுத்தறிவற்றது என்று தெரிந்திருந்தும், சிலர் கண்ணாடியினை பார்த்தவுடன் பதட்டம் கொள்வர். சிலர் கண்ணாடி உடைந்தால் அது கெட்ட சகுனம் என்றும், சிலர் கண்ணாடிக்குள்ளும் ஒரு உலகம் உள்ளது என்றும் நினைக்கின்றனர்.

6. சாத்தான்களைப் பற்றிய பயம் (டெமனோபோபியா, Demonophobia) – இயற்கையின் தீய படைப்புகளாகச் சாத்தான்களை நினைப்பவர்கள் இதுபோன்ற பயத்தைக் கொண்டிருப்பார்கள். அவர்கள் கூட்டமாக இருக்கும்போது பேசிய சாத்தான் பற்றிய சிந்தனைகளை, அவர்கள் தனியாக இருக்கும்போது சிந்தித்து பயம் கொள்வர்.

7. மாமியாரைப் பற்றிய பயம் (பேந்தெரபோபியா, Pentheraphobia) – இது பெரும்பாலான திருமணமானவர்களுக்கு இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் மூளையில் தேவையில்லாத எண்ணங்கள் வரும், அதன் விளைவாக விவாகரத்துகூட ஏற்படலாம்.

8. வேர்க்கடலை வெண்ணெய் வாயின் உட்புற தாடையின் மேற்புறத்தில் ஒட்டிக்கொள்ளும் என்ற பயம் (அராகிபியூடைரோபோபியா, Arachibutyrophobia) – சிலர் நாம் வெண்ணெய் அல்லது ஜெல்லி போன்ற பதார்த்தங்கள் வாங்கும்போது வேண்டாம் என்று கூறுவார்கள். அவர்களிடம் தான், இது போன்ற பயம் இருக்கும். அவை வாயில் ஒட்டிக்கொள்ளுமோ என்ற பயம் அவர்களிடம் இருக்கும்.

9. உட்காருவதற்கான பயம் (கேதிசோபோபியா, Cathisophobia) – மூலம் சம்பந்தப்பட்ட நோய் பிரச்சினைகள் உடையவர்களுக்கு இதுபோன்ற பயம் எப்போதும் ஏற்படும். பள்ளி நாட்களில்



The fear of mother-in-law

உட்காருவது குறித்த தண்டனைகள் பெற்றவர்கள் இதுபோன்ற பயங்களுக்கு உள்ளாக வாய்ப்புண்டு.

10. வாயசைக்கும் பொம்மையினைப் பற்றிய பயம் (ஆட்டோமடோனோபோபியா, Automatonophobia) – இதுவும் பொம்மை போன்றதுதான். சிலர் தனது கைகளின் மூலம் பொம்மையின் வாயினை மட்டும் அசைப்பார்கள், பின்னர் அதற்குத் தகுந்த குரலை எழுப்புவார்கள்.

11 ஆவது பயம் என்னவென்று உங்களுக்கு தெரியும் தானே! அந்தக் கொரோனா உலகை ஆட்டிப்படைக்கின்றது.

நண்பர்களே, இந்த 10 அச்ச உணர்வுகள் போன்று இன்னும் எவ்வளவோ விதமான அச்ச உணர்வுகள் உள்ளன. இனி நீங்கள் கூறுங்கள். இதைப் போல் உங்களுக்கு ஏதாவது பயம் இருக்கிறதா? இதற்குரியபதிலை மட்டுமில்லாமல், எனது சிறு கட்டுரை பற்றிய அபிப்பிராயத்தையும் எனக்குக் கண்டிப்பாக எனது முகநூல் பக்கத்தில் (www.facebook.com/scinirosh)




அனைவருக்கும் இனிய தைத் திருநாள் நல்வாழ்த்துக்கள்



Jaffna Bazar
Jaffna Bazar
2021 ஆண்டுக்கான
புத்தம் புது டிசைன்களை
வாங்கி மகிழுங்கள்!
இனிய தைப் பொங்கல்
நல்வாழ்த்துக்கள்
உங்கள் இல்லத்திற்கு தேவையான
அனைத்து மளிகைப்பொருட்களும்
பசுமையான மரக்கறி மற்றும்
கடல் உணவு வகைகளும்
KADHIR
Laila
Basmati Rice
BASMATI RICE
Jaffna Bazar, Kaiser Straße.49 ,
69329 Frankfurt Main
Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425

# Tropical Cyclone Hitting Again

## in the Northern and Eastern Provinces -Sri Lanak

Bavvatharani R
Nallur

A tropical cyclone is a natural disaster based on a region of violently circulating air about a central core of low atmospheric pressure relative to its nearby. These devastating atmospheric phenomena are capable of surface winds with continual maximum speeds in excess of 62 km/hr, heavy rains and thundershowers along and between its spiral bands, massive waves and strong currents up to great depths when over the ocean and powerful storm flows while making landfall. The flooding occurs by this lays variety of feelings, emotions, effects impacts on all the beings, mainly the people living in coastal areas. The fishermen and their families lose their houses and belongings. They are the ones who are immediately hit by natural disasters. Next are the farmers who totally depend on their crops and paddy. The flood cause lots of damages and loss to these people. A great number of houses, businesses and farmlands located at a low altitude have already submerged under water as a result of heavy downpours. Not only for the human beings, the animals and birds face lots of challenges during cyclone. Flood has an effect and impact on all the living beings whereas the human beings are concerned they become helpless when there is natural disaster.



The school children are happy to stay at home and play during this time by making paper boats and play in rain. The teenagers and youth wish to compete with each other taking photos, selfies and to put in their social media. They love to see what is happening around. Parents worry about the health of their family members especially the very young members and the very old of their family. Those who resides in the hill areas too very much affected by soil erosion during floods. People cut tree's branches, strengthen their houses and take precautionary measures and keep them shelves ready to face the flood and cyclone.

Sri Lanka, India and Bangladesh depend on the monsoon for power generation as well as irrigation, but excessive downpours and storms cause casualties and destroy property almost every year. In May 2003, a tropical cyclone officially called very s evere cyclonic storm BOB 01 produced the worst flooding in Sri Lanka in 56 years. The first storm of the 2003 North Indian Ocean cyclone season, it developed over the Bay of Bengal on May 10.

In December 2020, many areas and roads in Jaffna were flooded by the heavy rain. Even though Cyclonic Storm Burevi was a weak tropical cyclone which made landfall in Sri Lanka, Burevi killed two people, destroyed 99 houses and over 95000 people were affected with Jaffna bearing the effect as rain continued to last the district and brought minimal impact to Southern India. While estimates reveal around 55,000 of them are from Jaffna, the heavy rainfall that poured is expected to displace many more. Schools in the northern and eastern provinces, home to millions of people.

As Cyclone Burevi continues to destroy coastal areas of the North-East and Tamil Nadu, a torrential rainfall overran the city of Jaffna, blocking movement and causing severe damages to residential areas and businesses.










அனைவருக்கும் இனிய தைத் திருநாள் நல்வாழ்த்துக்கள்

இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துக்கள்

# LAKSHMI IMPEX

LAKSHMI IMPEX

பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

சுவையான இலங்கைக் கருவாட்டுக்கு நாடுங்கள்

தேடி வந்தோரை நாடி வரவழைக்கும்
**இலட்சுமி இம்பெக்ஸ்**
நாளும் மகிழ்விக்கும்
விலையும் தரமும்...

இல்லத்திற்கு வேண்டிய
அனைத்து மளிகைப்
பொருட்களையும்
தரமாகவும் மலிவாகவும்
தருகின்றோம்.




பெயர் பெற்ற Narresh Brand தயாரிப்புக்கள் எம்மிடம் கிடைக்கும்




இலங்கை ஆழ்கடலில்
பிடிக்கப்பட்டு சிறந்த சுகாதார
முறையில் தயாரிக்கப்பட்டு ஐரோப்பிய
தரசான்றிதழுடன் இறக்குமதி
செய்யப்பட்ட தரமான கருவாடுகளை
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

LAKSHMI IMPEX Lütgendortmunder Str 67 44388 Dortmund Germany

Tel: 0049 157 3134 7867 | Email: Lakshmiimpexj@gmail.com

இங்கிலாந்தில் பெயர்பெற்ற ஸ்தாபனம்...

# DSA Foods

DSA
PURE EXOTIC FOODS

Wholesale Suppliers of Superior Quality

NARRESH
THE TASTIER CHOICE

இல்லத்திற்கு வேண்டிய அனைத்து
மளிகைப் பொருட்களையும் தரமாகத் தருகின்றோம்.

இனிய
தைத்
திருநாள்
வாழ்த்துகள்

சுவையான இலங்கைக் கருவாட்டுக்கு நாடுங்கள்

இலங்கை ஆழ்கடலில் பிடிக்கப்பட்டு சிறந்த
சுகாதார முறையில் தயாரிக்கப்பட்டு ஐரோப்பிய
தரசான்றிதழுடன் இறக்குமதி செய்யப்பட்ட தரமான
கருவாடுகளை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.










Supplying you with
highest Quality
Products

DSA Foods Unit 11 Watermill Business Center Edison Road, Enfield, EN3 7XF UK

Tel: 0044-203-583-2116 |07889-424-055, 07342-742-069

arthik@dsafoods.com | www.dsafoods.com| www.narresh.co.uk



# திருமந்திரமும் வாழ்வியலும் 57

## தாரணை

தாரணை என்பது சீவான்மாக்கள் பரம்பொருளோடு கலப்பதற்காகச் செய்யப்படும் பயிற்சியாகும். இக்கருத்தைக் கூறும் திருமூலநாயனாரின் திருமந்திரம் பாடல் எண் 597

> அரித்த உடலை ஐம்பூதத்தில் வைத்துப்
> பொருத்த ஐம்பூதம் சத்தாதியில் போந்து
> தெரிந்த மனாதிசத் தாதியில் செல்லத்
> தரித்தது தாரணை தற்பரத் தோடே

இச்சைகள் ஆசைகள் அரித்துத் தின்கின்ற இந்த உடம்பை, நீர், நெருப்பு, காற்று, நிலம், ஆகாயம் என்ற ஐம்பூதச் சேர்க்கையால் உண்டாக வைத்து, பொருந்திய ஐம்பூதங்கள் சத்தம், நாதம் முதலானவற்றில் அடங்கி, மனம் முதலிய கரணங்களும் சத்தத்தில் சங்கமிக்க சீவான்மாக்கள் பரம்பொருளோடு ஒன்றிக் கலந்திருப்பதே தாரணைப் பயிற்சி ஆகும்.

தாரணைப் பயிற்சியை மேற்கொள்ளும் முறையை கூறும் திருமந்திரம் பாடல் எண் 588

> கோணா மனத்தைக் குறிக்கொண்டு கீழ்க்கட்டி
> வீணாத் தண்டுடே வெளிஉறத் தான்நோக்கிக்
> காணாக்கண் கேளாச் செவிஎன்று இருப்பார்க்கு
> வாழ்நாள் அடைக்கும் வழிஅது வாமே

தடுமாற்றம் இல்லாது, உறுதியாக ஒன்றில் நிற்கும் மனம். கீழ் நோக்கிச் செல்லாது தடுத்து, தியானமான குறிக்கோளை மனதில் கொண்டு, நடு நாடி வழியாகச் செல்லும் பிராணனை மனம் கொண்டு, கண்கள் வெளிப்பார்வை பார்க்காமலும், காதுகள் வெளிப்புற ஓசைகளைக் கேட்காமலும் அடங்கி இருப்பவர்களுக்கு, அப்படி இருப்பதே வாழ்நாளாகிய ஆயுள் அழியாமல் இருக்க அழிவைத் தடுத்து நிறுத்தப் போடும் கல் ஆகும்.

தாரணைப் பயிற்சியால் அங்கும் இங்கும் தாவும் மனம் என்னும் குரங்கை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரலாம் எனக் கூறும் திருமந்திரம் பாடல் எண் 595

> நிரம்பிய ஈர்ஐந்தில் ஐந்தவை போனால்
> இரங்கி விழித்திருந்து என்செய்வை பேதாய்
> வரம்பினுள் கோலி வழிசெய்கு வார்க்குக்
> குரங்கினைக் கோட்டை பொதியலும் ஆமே

மனித உடம்புக்குள் நிரப்பி வைக்கப்பட்டுள்ள பத்து [உயிர்க் காற்று, மலக் காற்று, தொழில் காற்று, ஒலிக் காற்று, நிரவுக் காற்று, தும்மல் காற்று, விழிக் காற்று, கொட்டாவிக் காற்று, இமைக் காற்று, வீங்கற் காற்று] காற்றுக்களும் ஞானேந்திரியங்களாலும், கன்மேந்திரியங்களாலும் இயக்கப்படுபவை. இவற்றில் ஞானேந்திரியங்கள் ஐந்தும் நீங்கினால், அதற்காக நீ இங்கே வருந்தி அழுது என்ன பயன்? பேதையே! இந்த இந்திரியங்களைக் கடந்து நிற்பவர்களுக்கு மனமாகிய குரங்கை, உடம்பாகிய கோட்டைக்குள்ளே அடங்கி இருக்கச் செய்யவும் இயலும்.

தாரணைப் பயிற்சியால் உந்த உடம்பில் பல காலம் வாழலாம் எனக் கூறும் திருமந்திரப் பாடல் எண் 594

> வாழலு மாம்பல காலும் மனத்திடைப்
> போழ்கின்ற வாயு புறப்படாப் பாய்ச்சுறில்
> ஏழுசாலேகம் இரண்டு பெருவாய்தல்
> பாழி பெரியதோர் பள்ளி அறையிலே

உள்ளிருந்து கிழம்பி நாடி நரம்புகளை ஊடுருவிச் செல்லுகின்ற மூச்சுக் காற்றை வெளிப் போகாதவாறு தடுத்து நிறுத்தினால், ஏழு சாளரங்கள் [காதுத் துளை இரண்டு, கண்கள் இரண்டு, மூக்குத் துவாரம் இரண்டு, வாய் ஒன்று], இரண்டு பெரிய வாசல்கள் [கருவாய், மலவாய்] கொண்ட இந்த உடம்பாகிய பெரிய கோயிலின் பள்ளி அறையிலே பல காலம் வாழலாம்.

---

# வாடா மச்சான் நம்ம பேடியன்!

ஜூட் பிரகாஷ்
(மெல்போன் –அவுஸ்திரேலியா)

இலங்கை சர்வதேச கிரிக்கெட் விளையாடத் தொடங்கி 45 ஆண்டுகள் ஆகின்றது. இந்த 45 வருடங்களில், வடக்கு கிழக்கில் இருந்து எந்தவொரு கிரிக்கெட் வீரனும் இலங்கையின் தேசிய அணிக்கு இதுவரை விளையாடியதில்லை.

தேசிய அணியை விடுவோம், 19 வயதிற்குட்பட்டோர், 23 வயதிற்குட்பட்டோர், அணிகளில் கூட எம்மவர்களிற்கு இடமளிக்கப்படவில்லை, இடமளிக்க அவர்களிற்கு மனம் வரவில்லை.

மாகாண மட்ட போட்டிகளில் கூட, வடக்கு மாகாண அணிக்கு விளையாட தெற்கிலிருந்து வீரர்களை இலங்கை கிரிக்கெட் சபை தெரிவு செய்து அனுப்பும். அந்த மாகாண போட்டிகளில் ஆடும் எங்கள் பெடியலுக்கு சரியான bowling or batting கிடைக்காது.

LPLபோட்டிகளில் ஆடுவதற்கான தகுதியையும் நம்மவர்கள் எவரும் பெற்றிருக்கவில்லை. Jaffna Stallions அணியின் நிர்வாகத்தால், "developing players" என்ற போர்வையில், standby வீரர்களாகவும், net bowlers ஆகவும் உள்வாங்கப்பட்டவர்கள் தான், வியாஸ்காந், கபில்ராஜ், டினோஷன் மற்றும் விஜயராஜ்.

Sri Lanka Cricket தேர்ந்தெடுத்த 10 உள்நாட்டு வீரர்களையும் 6 வெளிநாட்டு வீரர்களையும் உள்ளடக்கிய 16 பேரில் இருந்து தான், ஆட்டத்தில் ஆடும் ஓஜ தேர்ந்தெடுக்கப்படலாம்.

LPL ஆரம்பமாகும் போது, வடக்கில் இருந்து வந்த நான்கு பேரும் இந்த 16 பேரில் உள்ளடங்கியிருக்கவில்லை. Jaffna Stallions அணியினர் பல்லேகலவில் நடத்திய 3 நாள் பயிற்சி முகாம், பிறகு அம்பாந்தோட்டையில் அணியுடனான பயிற்சி என்று இந்த நான்கு வீரர்களும் தங்களை மேம்படுத்திக் கொண்டிருக்க, எதிர்பாராத விதமாக 16ல் இருந்த விரர் ஒருவருக்கு ஏற்பட்ட காயம், வியாஸ்காந்தை 16க்குள் வரவைத்தது.



Turf pitch ல் விளையாடி பழக்கமில்லை, Flood lights விளையாடி பழக்கமில்லை, DewI handle பண்ணத் தெரியாது என்ற பாரச்சுமைகளை சுமந்து கொண்டு, தனது முதலாவது பந்தை வீச crease ற்கு ஓடி வந்த வியாஸ்காந்தின் தோள்களில் தங்கியிருந்தது அவனது கனவு மட்டுமல்ல, முழு தமிழர் தாயகத்தின் கனவுகளும் தான்.

சந்திமால், மத்தியூஸ், ரஸல் என்று கிரிக்கெட் உலகின் ஜாம்பாவான்களை கட்டுப்படுத்தி பந்து வீசிய வியாஸ்காந்தின் கண்களில் தெரிந்த நம்பிக்கையும் துணிச்சலும், அவர் பிறந்து வளர்த்த அந்தப் புனித மண்ணிற்கே சொந்தம் என்பதை சொல்லித் தான் தெரிய வேண்டியதில்லை. இலங்கை கிரிக்கெட் சபையால் 45 ஆண்டுகள் வேண்டுமென்றே புறக்கணிப்பட்ட மண்ணின் மைந்தன், தனக்கு தன்னவர்களால் உருவாக்கித் தரப்பட்ட வாய்ப்பை கச்சிதமாக கையாண்டு, தன்னையும் மண்ணையும் பெருமைப்படுத்த, முழு நாடும், ஏன் முழு உலகமும், Jaffna Boy என்ற நாமத்தை மெச்சிப் போற்றத் தொடங்கியது.

Jaffna Boy கிளப்பிய அலையில், தாங்கள் விடுபடக் கூடாது என்பதற்காக, அலையில் நீச்சல் அடிக்க வந்தவர்களை நாம் அனைவரும் அறிவோம்.

எல்லாத்தையும் தாண்டி, இலங்கை கிரிக்கெட் சபையும் ஜோதியில் இணைந்த போது, அதை பொறுக்க முடியாமல் சிங்கள சகோதரர்கள் பலர் இட்ட பின்னூடல்கள், கிரிக்கெட் சபைக்கு விழுந்த நெத்தியடிகள். நேரம் இருந்தால் Sri Lanka Crick-etd முகநூலை ஒருக்கா போய் பாருங்கோ.









அனைவருக்கும் இனிய தைத் திருநாள் நல்வாழ்த்துக்கள்

# இன்றும் எம்.ஜி.ஆர் என்ற மந்திரத்தை உச்சரிக்காத தேர்தல்கள் தமிழ்நாட்டில் கிடையாது



## மக்கள் திலகம். எம்.ஜி.ஆர் 104 ஆவது பிறந்த நாள்

**பிறந்த திகதி:** ஜனவரி 17, 1917
**பிறந்த இடம்:** நாவலப்பிட்டி, கண்டி, இலங்கை
**இறந்த திகதி:** டிசம்பர் 24, 1987
**தொழில்:** நடிகர், தயாரிப்பாளர், அரசியல்வாதி
**குடியுரிமை:** இந்தியா

### குடும்ப பின்னணி மற்றும் ஆரம்பகால வாழ்க்கை

**கே**ரள பெற்றோருக்கு பிறந்தவர், மருதூர் கோபாலன் ராமச்சந்திரன். அவருடைய பெற்றோரான மேலக்காடு கோபால மேனன் மற்றும் மருதூர் சத்யபாமா அவர்கள், கேரளாவின் பாலக்காடு பகுதியில் வடவனூர் பகுதியில் வசித்து வந்தனர். ஆனால், எம்.ஜி.ஆரின் தந்தை வழக்கறிஞர் என்பதால், அவருக்கு எதிராக பல குற்றச்சாட்டுகள் இருந்தது. இதன் காரணமாக அவர் கேரளாவிலுள்ள தனது சொந்த வீட்டில் இருந்து தப்பி ஓடினார். அவர் இலங்கை சென்று வாழ்க்கையைத் தொடங்கினார். அங்கு தான் எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்கள் பிறந்தார்.

மேலக்காடு கோபால மேனன் அவர்கள், சிலோனில் மருதூர் சத்யபாமா என்பவரை திருமணம் செய்தார். அங்கு அவர்களுக்கு ஜனவரி 17, 1917 ஆம் ஆண்டு, எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்கள் மகனாக பிறந்தார். எம்.ஜி.ஆரின் பிறந்த இடம் இன்றும் இலங்கையில் இருக்கிறது.

### திரையுலக வாழ்க்கை

எம்.ஜி.ஆர் தனது இளமைப்பருவத்திலேயே, நடிப்பில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். அவர் சிறுவனாக இருந்த போதே அவரது தந்தை இறந்துவிட்டார். அவரது தந்தையின் மறைவுக்குப் பின், குடும்ப சூழ்நிலைகளின் காரணமாக படிப்பைத்தொடர முடியாமல், பணம் சம்பாதிக்கும் நிர்பந்தம் ஏற்பட்டதால், இவர் நாடகங்களில் நடிக்கத் தொடங்கினார். பணம் சம்பாதிக்க வேண்டுமென்ற எண்ணத்தில், தனது பெயரை முதல்முறையாக 'ஒரிஜினல் பாய்ஸ்' என்ற நாடக குழுவில் பதிவு செய்தார். அவருடைய சகோதரரும் இந்த குழுவில் உறுப்பினராக இருந்தார். சில ஆண்டுகளுக்கு பிறகு, நாடகத்தில் நடிப்பதை விட்டுவிட்டு, 1935ல் தமிழ் திரையுலகில் சேர்ந்தார். 1936ல் சதிலீலாவதி என்ற படத்தில் துணை கதாபாத்திரமாக முதல்முறையாக நடித்தார். 1940களில் தான் அவருக்கு முன்னணி கதாபாத்திரத்தில் நடிக்க வாய்ப்புகள் கிடைத்தது. தமிழ் சினிமாவிலேயே இதுவரை பார்த்திராத வர்த்தகரீதியான ரொமாண்டிக் மற்றும் ஆக்க்ஷன் ஹீரோ என்று அவரை உருவாக்கிய படம்,இராஜகுமாரி. இது கலைஞரால் எழுதி உருவாக்கப்பட்டது. 1947ல், இராஜகுமாரி திரைப்படம் தமிழக திரையரங்குகளில் வெளியிடப்பட்டது. பின்னர், தமிழ் திரையுலகம் மூன்று தசாப்தங்களுக்கும் எம்.ஜி.ஆரை முழக்கமிட்டனர். 1956ல், எம்.ஜி.ஆர், திரையுலகில் தயாரிப்பாளராகவும், இயக்குனராகவும் உருவெடுத்தார். அவர் இயக்கிய முதல் படமான நாடோடி மன்னன, தமிழ்நாட்டில் பல திரையரங்குளில் ஓடி, பெரிய வெற்றிப்பெற்று, தமிழ் ரசிகர்களின் மனதில் ஒரு அங்கீகாரத்தைப் பெற்றது. ஒரு இயக்குனராக தனது முதல் படத்தின் வெற்றியைத் தொடர்ந்து, அவர் இரண்டு படங்களை இயக்கி நடிக்கவும் செய்தார். அவை உலகம் சுற்றும் வாலிபன் மற்றும் மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன ஆகும். 1971ல் வெளியான ரிக்க்ஷாக்காரன் படத்தில், ஒரு முக்கிய கதாபாத்திரத்தில் நடித்ததால், எம்.ஜி.ஆர் அவர்களுக்கு, சிறந்த நடிகருக்கான தேசிய விருது கிடைத்தது.

### விருதுகள் மற்றும் அங்கீகாரம்

1960ல், எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்கள் இந்தியாவின் பத்மஸ்ரீ விருதுக்காகத் தேர்வு செய்யப்பட்டார். ஆனால், அவர் அரசாங்கத்தின் பற்றற்ற நடத்தையின் காரணமாக அதை ஏற்க மறுத்துவிட்டார். ஏனென்றால், விருதில் பாரம்பரிய ஹிந்தி வார்த்தைகளுக்கு பதிலாக தனது தாய்மொழியான தமிழில் இருக்க வேண்டுமென்று அவர் விரும்பினார்.

ரிக்க்ஷாக்காரன் படத்திற்காக, தனது நடிப்பிற்காக சிறந்த நடிகருக்கான தேசிய விருதை 1972ல், எம்.ஜி.ஆர் பெற்றார். சென்னை மற்றும் உலக பல்கலைக்கழகமும் அவருக்கு முனைவர் பட்டம் வழங்கி சிறப்பித்தது. தமிழ்நாட்டின் சமுதாயத்தின் நன்மைக்காக அவருடைய பங்களிப்பை கௌரவிக்கும் விதமாக அவர் இறந்த பிறகு 1988ல் பாரத ரத்னா விருதை வழங்கப்பட்டது.

### தனிப்பட்ட வாழ்க்கை

எம்.ஜி.ராமச்சந்திரன் மூன்று முறை திருமணம் செய்து கொண்டார். அவரது முதல் இரண்டு மனைவிகள் நோயின் காரணமாக இறந்துவிட்டனர். எம்.ஜி.ஆரின் மறைவுக்குப் பிறகு, அவரது மூன்றாவது மனைவியான ஜானகி ராமச்சந்திரன் அவர்கள் அ.இ.அ.தி.மு.கவின் பொறுப்பை ஏற்றார்.

### இறப்பு


எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்களுக்கு சிறுநீரக பிரச்சினைகள் இருந்தது. சிறுநீரகக் கோளாறு காரணமாக 1984ஆம் ஆண்டு அக்டோபரில், அமெரிக்காவின் புரூக்ளின் நகரில் உள்ள டவுன்ஸ்டேட் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அதே ஆண்டு, சிறுநீரக மாற்று சிகிச்சை மேற்கொண்டார். இறுதியாக 1987ல் நோய்வாய்ப்பட்டார். டிசம்பர் 24ஆம் திகதி, 1987ல் இயற்கை எய்தினார். எம்.ஜி.ஆருடைய மரணம் தமிழ்நாட்டில் பெருங்கொந்தளிப்பை ஏற்படுத்தியது. கட்டுக்கடங்காத மக்களையும், அதிகளவில் போராடி உயிரிழந்த உணர்ச்சித் தமிழர்களையும் நிர்வகிக்க தமிழக அரசும், போலீஸ் அதிகாரிகளும் கடுமையாக போராடினர். அவரது மறைவுக்குப் பின், அதிமுக இரண்டு பிரிவுகளாக பிரிந்தது. ஒன்று அவரின் மனைவி ஜானகி ராமச்சந்திரன் தலைமையிலும், மற்றொன்று ஜே.ஜெயலலிதா தலைமையிலும் தனித்தனி கட்சிகள் உருவாகின. அவரது சத்யா ஸ்டுடியோ இப்போது ஒரு பெண்கள் கல்லூரியாக உள்ளது. சென்னை டி.நகர் பகுதியில் உள்ள அவரது வீட்டை தமிழக அரசு நினைவு இல்லமாக மாற்றி பராமரித்து வருகிறது. இன்றும் எம்.ஜி.ஆர் என்ற மந்திரத்தை உச்சரிக்காத தேர்தல்கள் தமிழ்நாட்டில் கிடையாது.




அனைவருக்கும் இனிய தைத் திருநாள் நல்வாழ்த்துக்கள்



# கொலஸ்டரோல் சிகிச்சையில் புதிய அணுகு முறைகள்



09 ஆம் பக்கத் தொடர்ச்சி...




படிந்துள்ள கொழுப்பையும் (Atheroma) படிப்படியாகக் கரையச் செய்யக் கூடியவையாகும்.

இதைப் பலர் உணர்ந்து கொள்ளாததாலேயே தாங்களாகவே மருந்தின் அளவைக் குறைப்பது அல்லது நிறுத்துவது போன்ற தவற்றைச் செய்கிறார்கள். ஸ்டரின் வகை மருந்துகளைத் தொடர்ந்து உபயோகித்து வரும்போது இரத்தக் குழாய்களில் உள்ள அடைப்பு படிப்படியாக் கரைந்து வரும். இதனால் குருதிச் சுற்றோட்டம் சீரடையும்.


''சமுதயா ரீதியில் பார்க்கும்போது லட்சக்கணக்கான உயிர்களைக் காப்பாற்ற முடியும். மக்கள் நீண்ட காலத்திற்கு நோயின்றி நலமாக வாழ வைக்க முடியும்'' என மருத்துவ நிபுணர்கள் கருத்துரைக்கிறார்கள்.

## யார் யாருக்கு மருந்து தேவை?

பலவகைப்பட்டவர்கள் இதன் மூலம் பயனடைய முடியும்.

40 முதல் 75 வயது வந்தவர்களிடையே மேற்படி கல்கூலேட்டவர்கள் மூலம் கணிக்கும் போது அவர்களுக்கு அடுத்த பத்து வருட காலத்திற்குள் பக்கவாதம் மாரடைப்பு போன்றவை வருவதற்கான சாத்தியம் 7.5 அல்லது அதற்கு மேல் எனில் மருந்து அவசியமாகும்.

ஏற்கனவே மாரடைப்பு வந்தவர்கள், அதற்கான பைபாஸ் சத்திரசிகிச்சை அல்லது ஸ்டென்ட் வைக்கப்பட்டவர்களுக்கும் அவசியமாகும். அத்துடன் வழமையான நாளாந்த செயற்பாடுகளின் போது இருதயத்திற்கு குருதி செல்வது போதாத நோய்களான **stable or unstable angina, transient ischemic attack** உள்ளவர்களுக்கும் மிக அவசியமாகும்.



வயது குறைந்தவர்களிலும் நோய் ஏற்படாமல் தடுப்பதற்கு அவசியமாகும். 21 வயதிற்கு மேற்பட்ட எவருக்கும் கெட்ட கொலஸ்டரோலான **LDL** ன் அளவு 190 ற்கு மேற்பட்டால் **statin** மருந்து அவசியமாகும் என புதிய வழிகாட்டல் சொல்கிறது. 40 முதல் 75 வயதான நீரிழிவு நோயுள்ள அனைவருக்கும் **Statin** மருந்து அவசியம் தேவைப்படும்.

மேற்குறிப்பட்டவர்களுக்கு மட்டுமின்றி எதிர்காலத்தில் பாதிப்புகள் ஏற்படக் கூடும் என மருத்துவர்கள் கணிப்பீடு செய்யும் இன்னும் பலருக்கும் இந்த ஸ்டரின் மருந்துகளைக் கொடுக்க வேண்டும் எனச் சிபார்சு செய்கிறார்கள்.

கெட்ட கொலஸ்டரோலான **LDL** ன் அளவை **50%** ற்கு அதிகமாகக் குறைக்க வேண்யவர்களுக்கு **Rosuvastatin 20- 40mg, Atrovastatin20- 40mg** கொடுக்க வேண்டும் எனச் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. **LDL** ன் அளவை 30**%** முதல் 50**%** மட்டுமே குறைக்க வேண்யவர்களுக்கு **Rosuvastatin 5- 10mg, Atrovastatin 10- 20mg, Simvastatin 20- 40mg** கொடுக்க வேண்டும் எனச் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. **LDL** ன் அளவை 30**%** ற்கு மட்டுமே குறைக்க வேண்யவர்களுக்கு **Simvastatin 10mg** மட்டுமே போதுமானதாகும்.

ஸ்டரின் மருந்துகளை மேற்கூறிய வழிகாட்டல்களுக்கு ஏற்ப ஆரம்பித்த பின்னர் மூன்று மாத்திற்கு ஒரு முறை 6 மாதத்திற்கு ஒரு முறை எனக் குருதிப் பரிசோதனை செய்து அதற்கு ஏற்ப மருந்துகளின் அளவைக் மாற்ற வேண்டியதில்லை. முதலில் கணித்த மருந்தின் அளவைத் தொடர வேண்டும். அவ்வாறு தொடர்வதால்தான் எதிர்கால ஆபத்துக்களைத் தவிர்க்க முடியும் என்பதை இங்கு வலியுறுத்தி சொல்ல வேண்டியுள்ளது.




குருதியில் கொலஸ்டரோல் அளவு மிக அதிகமாக இருந்தால் இந்த ஸ்டரின் மருந்துகளுடன் கொலஸ்டரோலைக் குறைக்கும் **Fibrates, Niacin** போன்ற வேறு பல மருந்துகளையும் மருத்துவர்கள் இதுவரை கொடுத்து வந்துளார்கள். கொலஸ்டரோல் அளவைக் குறைப்பதற்காக அவ்வாறு இரண்டாவது மூன்றாவது மருந்துகளை சேர்ப்பதால் பயனில்லை எனப் புதிய வழிகாட்டல் சொல்கிறது.

ஸ்டரின் மருந்துகள் மட்டும் எதிர்கால ஆபத்துகளைத் தடுக்க முடியுமா? நிச்சயமாக இல்லை.

## நலமான வாழ்க்கை முறை

எமது வாழ்க்கை முறை சரியானதாக இருக்க வேண்டும். நலவியல் ரீதியாக சிறந்த வாழ்க்கை முறை என்பது என்ன? ரீவி அல்லது கணனி முன் பெருமளவு நேரம் இருந்து கொண்டு நொட்டு நொறுக்குத் தீனிகளை கொறிப்பதையே இன்று பெரும் பாலானவர்கள் செய்கிறார்கள். முறையான உடல் உழைப்போ ஆரோக்கியமான உணவுப் பழக்கங்களோ பெரும்பாலனவர்களிடம் இல்லை.

நார்ப்பொருள் அதிகமுள்ள தானியங்கள் காய்கறிகள் பழவகைகளை அதிகம் உணவில் சேர்க்க வேண்டும். கொழுப்பு வகைகள் மற்றும் பொரித்த உணவுகளைக் குறைக்க வேண்டும். மென்பானங்கள் போன்றவற்றையும் அதிகம் பாவிக்கக் கூடாது. தினசரி உடற் பயிற்சி செய்ய வேண்டும். அல்லது உடல் உழைப்பில் ஈடுபட வேண்டும். எடையை அதிகரிக்க விடக் கூடாது. புகைத்தலைத் தவிர்க்க வேண்டும்.

ஆம் ஆரோக்கியமான வாழ்க்கை முறைதான் நோயற்ற நீண்ட வாழ்விற்கான பலமான அத்திவாரமாகும்.

நன்றி: ஹாய் நலமா






# நல்ல செய்தியும் நக்கல் கேள்வியும்!

வெற்றிமணிக்காக
வெற்றிமைந்தன் (தமிழ்நாடு)

ஒவ்வொரு மணி நேரமும் நமது உடலில் ஒரு மில்லியன் அணுக்கள் மாற்றப்படும். [அடேங்கப்பா... ஒரு பெரிய நிறுவனமே இயங்குது போல. லே ஆஃப் [Lay off ] பிரச்சினை வராதா?]

நமது கண்ணுக்கு 50 வகையான சாம்பல் நிறங்களைப் பிரித்தறிய முடியும். [ அடக் கடவுளே! அப்போ நமக்கு பிடிச்ச கலர்ல எல்லாம் எப்படி ? ]

மனிதனுடைய தொடை எலும்புகள் காங்கிரீட்டை விட வலிமையானவை [ சந்தேகம் இருக்கிறவங்க மட்டும் தொடையால காங்கிரீட்டை உடைக்க டிரை பண்ணுங்க.. நான் எஸ்கேப் ]

மனித இதயம் முப்பது அடி நீளத்துக்கு இரத்தத்தைப் பீச்சியடிக்கும் வலிமை கொண்டது [ நல்ல வேளை ஒலிம்பிக்ல இதைச் சேக்கல ]

நமது கண்கள் பிறந்த நாளில் எவ்வளவு இருக்குமோ அவ்வளவு தான் இருக்கும் ஆயுள் முழுதும். அளவு மாறாது. ஆனா மூக்கும் காதும் காலம் பூரா வளர்ந்துகொண்டே இருக்கும் [ ஐயையோ... அப்போ யானைக்காது மாதிரி ஆயிடுமா ]

நமது இருமலுக்கு மணிக்கு 60 கிலோ மீட்டர் வேகம் உண்டு [ அட... நம்ம ஸ்கூட்டியை விட அதிகம் ]

நம்ம உடல்லயே அதிக வேகமாக வளரும் முடி, தாடி தான். ஷேவ் பண்ணாமலேயே இருந்தால் நம்ம சராசரி வாழ்நாளில் முப்பது அடி நீளம் வரை வளரும். [ சீக்கிய நண்பர்கள் டிரை பண்ணாதீங்க எட்டு மீட்டர் தொப்பி தேவைப்படும் ]

பிறந்த ஆறு முதல் எட்டு வாரங்கள் வரை குழந்தைகள் அழுதால் கண்ணீர் வராது [ அதுக்காக சும்மா சும்மா அழ வெச்சு டெஸ்ட் பண்ணாதீங்க ]

கைவிரல்களைப் போல நாக்கிலும் தனித்துவமான ரேகைகள் உண்டு [ நல்ல வேளை கைநாட்டுக்குப் பதிலா நாக்கு நாட்டு வைக்கல... ]

புன்னகைக்கு நமது முகத்தில் ஐந்து முதல் ஐம்பத்து மூன்று ஜோடி தசைகள் செயலாற்றும் [எவன்டா இதெல்லாம் எண்ணுறது ? ]

இருபது பேர்ல ஒருத்தருக்கு ஒரு எக்ஸ்ட்ரா விலா எலும்பு இருக்கும் [ ஓ... தயாரிப்புப் பிழை ? ]

கருப்பு நிறம் உடையவர்களுடைய தோல் விரைவில் சுருங்காது. [ அட... அதான் சூப்பர்ஸ்டார் இந்த வயசுலயும் இப்டி இருக்காரு ]

மனித உடலில் இரத்தம் ஒரு நாள் ஓடும் தூரம் 60 ஆயிரம் மைல்கள் ! [ அடேங்கப்பா... ஒரே நாளில் உலகத்தையே சுற்றி வரலாம் போல ]

பெண்களின் இதயம் ஆண்களின் இதயத்தை விட வேகமாகத் துடிக்கும் [ உன்னை விட அதிகமாய் துடிக்கும் இதயம் எனக்கு... என்று பெண்கள் கவிதை எழுதலாம் ]

நாளொன்றுக்கு ஒரு இலட்சம் தடவை இதயம் துடிக்கும் [ அட... சுளுக்கு கிளுக்கு புடிக்காதா ? ]

தலைமுடியும் நகமும் ஒரே மூலக்கூறிலிருந்து உருவாகிறது [ நல்ல வேளை கையில முடியும், தலையில நகமும் வளரவில்லை... ]

---

# நான் வில்லனாக இருந்த கணப்பொழுது



02 ஆம் பக்கத் தொடர்ச்சி...

வந்து என் காலடியில் வைத்தான். எட நான் இன்னும் கொஞ்சம் வீட்டுக் கதவோடு நின்று இருக்கலாம்.அவன் இன்னும் அறைக்கு கிட்டத் தந்திருப்பான் என்று எண்ணினேன். வீட்டுக்குள் விடவும் பயம் கள்ளன்கள்.

அவன் வைத்த கொம்பியூட்டர் மேசைப் பெட்டியைத் தூக்கினேன். அசைக்கமுடியவில்லை. அந்தச் சின்னப்பெடியன் எப்படிக் கஸ்டப்பட்டு இருப்பான். ஒரு கை பிடித்திருந்தால் சுகமாகக் கொண்டுவந்து தந்திருப்பானே என மனம் வருந்தியது. அந்தப் பெடியன் வானடிக்குச் சென்றுவிட்டான். வான் கதவைத் திறக்கு முன் நாரியில் கை வைத்து பின்பக்கமாக ஒருக்கால் நாரிமுறித்துவிட்டு வானில் ஏறினான். பாவமாக இருந்தது.

மகளுக்குப் போன் அடித்துப் பேரன் ஆட்டா மா கொண்டுவாறான் பாக்கோட தூக்கமாட்டன் வந்ததும் பார்த்து தூக்கவும் என்றேன்.

எனக்கு ஒரு சந்தேகம். அந்தப் பார்சல்காரப் பெடியன் மேல் அப்படி இரக்கம் வரக் காரணம் அவன் பட்ட பாடோ அல்லது அவனைப்போலவே ஒல்லியாக இருந்த என் பேரன் நினைப்போ

ஆனால் இப்போ எப்ப பார்சல் வான் வாசலில் நின்றாலும் அந்த பார்சல் கொண்டு வந்த பையனையே மனம் தேடுகிறது. ஒரு கை கொடுக்கத் துடிக்கிறது. இந்தத் துடிப்பு என் உயிர்த்துடிப்பு உள்ளவரை தொடர்ந்தால் நான் மனிதனாக இறப்பேன்.



அனைவருக்கும் இனிய தைத் திருநாள் நல்வாழ்த்துக்கள்

# முஸ்லிம்கள் மீது மற்றுமொரு யுத்தம்!
## “ஒரு நாடு, ஒரு சட்டம்”

03 ஆம் பக்கத் தொடர்ச்சி...

‘‘அடக்கம் செய்ய அனுமதிக்க முடியாது’’ என்ற அரசாங்கம் நியமித்த தொழில் நுட்பக் குழுவின் பிடிவாதமான நிலைப்பாட்டையும் கேள்விக்குட்படுத்தினார். தொழில்நுட்பக் குழுவின் தீர்மானத்தின் பின்னணி குறித்த பல கேள்விகளை அவரது உரை எழுப்பியிருக்கின்றது.

இவ்விடயத்தில் மனித உரிமை அமைப்புக்கள், அரசியல் கட்சிகள் முன்வைத்த கோரிக்கைகளை அரசாங்கம் புறக்கணித்துவிட்டது. தகனம் செய்வதைத்தான் கட்டாயமாக்கியிருக்கின்றது. சிறுபான்மையினரின் மத நம்பிக்கைக்கு எதிரான இந்த ஒடுக்குமுறை இப்போது சர்வதேச கவனத்தையும் பெற்றுவிட்டது.

இலங்கையில் கொரோனா பரவத் தொடங்கிய காலத்திலிருந்தே இந்தப் பிரச்சினை சர்ச்சைக்குரிய ஒன்றாகத்தான் இருந்துவருகின்றது. இந்த விடயத்தில் தமக்கு இருக்கக்கூடிய பொறுப்பைத் தட்டிக்கழித்துவிடுவதற்கான உபாயமாகத்தான் தொழில்நுட்பக் குழு ஒன்றை அரசாங்கம் அமைத்ததா என்ற கேள்வியும் எழுகின்றது.

இந்த விவகாரம் நீதிமன்றத்துக்கும் கொண்டுசெல்லப்பட்டது. நீதிமன்றம் இதனை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாமல் தள்ளுபடி செய்துவிட்டது. உண்மையில், பிரச்சினை சட்டத்துறையுடன் சம்பந்தப்பட்டது அல்ல. இது அரசியல் ரீதியான ஒரு பிரச்சினை. இதனை அரசியல் ரீதியாகத்தான் அணுக வேண்டும்.

அரசாங்கம் இவ்விடயத்தில் நழுவல் போக்கிலேயே செயற்படுகின்றது. அதனை சவாலுக்கு உள்ளாக்கி அரசுக்கு அழுத்தம் கொடுக்கக்கூடியளவுக்கு முஸ்லிம் தலைமைகளும் பலமானதாக இல்லை. உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னரான நிகழ்வுகள் முஸ்லிம்களை முற்றகவே வலுவிழக்கச் செய்துவிட்டது.

‘‘இந்த நாட்டில் வாழும் அனைத்து மக்களினதும் மத உரிமைகளை உறுதி செய்வதற்கும், அவர்களுடைய பாரம்பரியங்களுக்கு மதிப்பளிப்பதற்கும்



“கவன் சீலை போராட்டம்”

ஏதுவான வகையிலேயே அரசாங்கம் செயற்படும்’’ என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் உறுதியளித்திருந்தாலும் கூட, நிலைமைகள் அவ்வாறில்லை.

ஆனால், ‘‘கொரோனா வைரஸினால் மரணிப்பவர்களின் உடல்களை தகனம் செய்வதற்கான தீர்மானம் சுகாதாரப் பிரிவினரின் வழிகாட்டல்களுக்கு அமைவாகவே மேற்கொள்ளப்பட்டது. இதில் அரசியல் தலையீடுகள் எதுவும் இல்லை’’ எனவும் மஹிந்த கூறியிருப்பது அரசாங்கத்தின் அணுகுமுறையில் மாற்றம் வரப்போவதில்லை என்பதைத்தான் உணர்த்துகின்றது.

கொரோனாவினால் மரணிப்பவர்களின் உடல்களை அடக்கம் செய்ய முடியும் என உலக சுகாதார நிறுவனம் கூட கூறியிருக்கின்றது. இதன் அடிப்படையில் 180 க்கும் அதிகமான நாடுகள் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கான உரிமையைக் கொடுத்திருக்கின்றன. ‘‘மரணிப்பவர்களின் உடலில் இருக்கும் வைரஸ் ஒருபோதும் நீருடன் பரவப்போவதில்லை’’ என உலக சுகாதார அமைப்புடன் சம்பந்தப்பட்ட மருத்துவர்களே தெளிவாகக்கூறிவிட்டனர்.

ஜனாஸாக்களை அடக்கம் செய்யும் போது அதற்கான சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றினால் பாதிப்பு ஏற்படப்போவதில்லை என்பதும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது.

இதற்குப் பின்னரும் தொழில் நுட்பக் குழு எடுத்த தீர்மானமும், அத்தீர்மானத்தைத்தான் நடைமுறைப்படுத்தப்போவதாக அரசாங்கம் சொல்லிக்கொள்வதும், முஸ்லிம்கள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. ‘‘ஒரு இனத்தைப் பழிவாங்குவதற்கான செயற்பாடா இது?’’ என பாராளுமன்ற உறுப்பினர் ஹலீம் கேள்வி எழுப்பியிருப்பது அனைத்து முஸ்லிம் மக்களினதும் ஆதங்கத்தை வெளிப்படுத்துகின்றது.

‘‘ஒரு நாடு, ஒரு சட்டம்’’ என்பதைத் தமது பிரதான கோஷமாக முன்வைத்திருக்கும் கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம், சிறுபான்மையினருடைய மத நம்பிக்கைகளுக்கு இடமளிக்கும் ஒரு நடைமுறையை ஏற்றுக்கொள்ளும் என எதிர்பார்க்க முடியாது. பௌத்த மதக்கோட்பாடுகளின் அடிப்படையில் தான் அனைத்தும் நடைபெற வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு. தற்போதைய அரசாங்கம் அந்த அடிப்படையில்தான் கட்டியமைக்கப்பட்டிருக்கின்றது.

இங்கு பௌத்த மதம் தவிர்ந்த அனைத்தும் மதங்களும் இரண்டாம் பட்சம்தான். அதுபோலத்தான் மத நம்பிக்கைகளும். மற்றொரு மதத்தினரின் நம்பிக்கைகளுக்கு இடமளிப்பது அதற்கான அங்கீகாரத்தைக் கொடுப்பதாக அமைந்துவிடும் என்ற அச்சம் பௌத்த மதத்தினரிடம் இருக்கிறது. அதிலும் குறிப்பாக உயிர்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் முஸ்லிம்களை இலக்கு வைத்த செயற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

அரசாங்கத்தினால் அமைக்கப்படும் குழுக்கள் கூட, அரசாங்கத்துக்குச் சங்கடத்தைக் கொடுக்கும் முடிவுகளை எடுக்கப்போவதில்லை. அரசாங்கத்தின் விருப்பங்களை நிறைவேற்றுவதுதான் அவற்றின் பணியாக இருக்கும். அந்த வகையில்தான் அரசாங்கம் நியமித்த தொழில்நுட்பக்குழு கூட, அரசு விரும்பக்கூடிய பதிலைத்தான் கொடுத்திருக்கின்றது.

# திடமாயுறைகின்றான் திருக்கேதீஸ்வரத்தான்

13 ஆம் பக்கத் தொடர்ச்சி...

சற்றும் சலியாதவராய் 90 நிமிடங்கள் இசையோடு இயைந்த நடன ஆக்கத்திற்கு ஆடல் வழங்கினார்கள் அபிநயக்ஷேத்ரா நடனப்பள்ளி மாணவிகள்.

இவர்களுடன் பெங்களூர் கலைஞர்கள் சிலரும் இலங்கை கலைஞர்கள் அனந்தகிரிஷ்ணன் ஸ்ரீகாந்த் மற்றும் பத்தும் சாமர ஆகியோரும் இணைந்து , கலைகளினூடாக அன்பினை பகிர்ந்து மகிழ்ந்தனர்.

மண்டபத்தில் இருந்து வெளிவந்தோர் கண்களில் ஈரமும், அகத்திடை புத்தொளியும், ஆனந்தத்தில் புகழ் சொற்களை தேடிக்கொண்டும் இருந்த பிரமிப்பை கண்டு மலைத்தவளாய், நிர்மாணத்துக்கு தேவையான பணத்திலும் அதிகமாகவே திரட்டி இலங்கையின் வரலாற்று சிறப்பு பெற்ற கோவிலின் கேது சந்நிதி நிர்மாண பணிக்கு வழங்கும் பாக்கியம் கிடைத்ததையும் எண்ணி , இயலாக்கம் செய்யும் போதும், இந்தியாவில் திரு சாய் ஷ்ரவணம் அவர்களிடம் ஒலிப்பதிவு செய்யும் போதும், நெறியாள்கை செய்யும் வேளையிலும், நாட்டிய படைப்பாக தயாரிக்கும் போதும் சிவனருளை நன்கு உணர்ந்தவளாய் யாவும் சிவ லீலை அன்றி வேறொன்றும் இல்லை என அவனருளால் அவன் தாள் பணிந்தேன்.






அனைவருக்கும் இனிய தைத் திருநாள் நல்வாழ்த்துக்கள்




**வெற்றிமைந்தன்**

### அழகன்

மிக அழகாக நேர்த்தியாகப் பின்னப்பட்ட காதல் கதை அழகன். மௌனம் சம்மதம் திரைப்படத்தின் மூலம் தமிழ்த்திரையுலகிற்கு அறிமுகமான மலையாள மெகா ஸ்டார் மம்முட்டியின் இரண்டாவது தமிழ்ப்படம் இது.

பாலசந்தர் எனும் புதுமை இயக்குனர் காட்டாற்று வெள்ளமாய் ஓடித் திரிந்தவர், மெல்ல மெல்ல மென்மையான மனதைத் தாலாட்டும் நந்தவனத்துக்குள் நடமாடத் துவங்கிய காலகட்டம் என்று கூட சொல்லலாம்.

புதுப் புது அர்த்தங்கள், அழகன் என அவரிடமிருந்து அழகான காதல் உணர்வுடைய படங்கள் வெளிவந்தது ரசிகர்களுக்கு இரட்டை ஆனந்தம்.

மம்முட்டி, பானுபிரியா, மது, கீதா ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருந்தார்கள்.

மம்முட்டி நடுத்தர வயது மனிதர். நான்கு குழந்தைகளுக்குத் தந்தையாய் இருந்து அவர்களைக் காப்பாற்றி வருகிறார். அவருடைய மனைவி விபத்தில் இறந்து போய்விட்டிருக்கிறார். கல்லூரி மாணவி மது மம்முட்டியின் மீது காதல் வயப்படுகிறாள். ஆனால் மம்முட்டியோ அந்தக் காதலை ஏற்றுக் கொள்ளவில்லை. காரணம் இருவருக்கும் இருந்த வயது வித்தியாசம்.




மம்முட்டி ஒரு டியூட்டோரியல் கல்லூரியில் படிக்கிறாள். அங்கே கீதா மம்முட்டியை நேசிக்கிறாள். ஆனால் மம்முட்டி மறுத்து விடுகிறார்.

நாட்டியக் கலைஞர் பானுபிரியாவுக்கும், மம்முட்டிக்கும் இடையே காதல் மலர்கிறது. ஆனால் இருவரும் சேரவிடாமல் ஈகோ தடுக்கிறது. இந்த சூழலில் மம்முட்டியின் நான்கு பிள்ளைகளும் உண்மையில் அனாதைகள் எனும் உண்மை தெரிய வருகிறது. மது மனம் கசிந்து, மம்முட்டியையும் தனது தந்தையில் நிலையில் பார்க்கத் துவங்குகிறாள்.

ஈகோவினால் பிரிந்திருக்கும் மம்முட்டியையும், பானுபிரியாவையும் குழந்தைகளும் மதுவும் சேர்த்து வைக்கிறார்கள். இந்த 'சுபம்' கதையைத் தான் பாலசந்தர் குடும்பங்கள் கொண்டாடும் விதமாக எடுத்திருந்தார். படமும் பெரும் வெற்றி பெற்றது.

இந்தப் படத்தின் இசைக்காக பாலசந்தர் மரகதமணியைப் பயன்படுத்தினார். பாடல்கள் மிகவும் பிரபலமாயின. முழு இரவிலும் தொடர்வது போல இருக்கும் 'சங்கீத ஸ்வரங்கள்' பாடலை உண்மையிலேயே இரவு முழுவதும் விழித்திருந்து படமாக்கினார் பாலசந்தர்.

சாதி மல்லிப் பூச்சரமே, மழையும் நீயே, துடிக்கிறதே நெஞ்சம், தத்தித்தோம், வந்தேன் வந்தேன் வந்தேன், அவன் தான் அழகன், சங்கீத ஸ்வரங்கள் என அனைத்துப் பாடல்களுமே பிரபலமாயின.

வந்தேன் வந்தேன் வந்தேன் பாடலை கதை நாட்டியமாக மிக அழகாகப் பின்னியிருப்பார் பாலசந்தர். தூங்கிக் கொண்டிருக்கும் கணவனை தட்டி எழுப்பி வலுக்கட்டாயமாய் மீன் பிடிக்க அனுப்பி வைக்கிறாள் மனைவி. அவன் போன இடத்தில் இலங்கைக் கடற்படை சுட்டதில் பலியாகி விடுகிறான். அதை அறிந்த மனைவி அதிர்ச்சியடைகிறாள். அவனுடைய இந்தச் சாவுக்கு நானே காரணம் என கலங்கி ஆடியபடியே சிலையாய் உறைந்து விடுகிறாள். என ஒரு பாடலில் ஒரு சினிமாவையே மிக நேர்த்தியாய் சுருக்கியிருப்பார் பாலசந்தர். அந்த ஒன்லைனின் அழகிய திரை வடிவமாக பின்னர் நீர்ப்பறவை படம் வெளியானது. இருந்தாலும் இந்தப் பாடலில் இருந்து அந்தக் கதை உருவானது என்று சொல்வதற்கில்லை.



### 29 வானமே எல்லை !

இளைஞர்களுக்கு வாழ்க்கையில் ஒரு பிடிப்பைக் கொடுக்க வேண்டும் என்பதற்காக பாலசந்தர் உருவாக்கிய படங்களில் மிக முக்கியமானது இந்தப் படம். உன்னால் முடியும் தம்பியைப் போல, வானமே எல்லையும் சமூக மாற்றத்துக்கான விதை என்பதில் சந்தேகமில்லை.

ஆனந்த்பாபு, ரம்யா கிருஷ்ணன்,விஷாலி கண்ணதாசன்,பப்லூ, ராஜேஷ் மற்றும் பலர் இந்தப் படத்தில் தங்கள் பங்களிப்பைச் செய்திருந்தார்கள்.

ஐந்து நண்பர்கள். வாழ்க்கையின் பல்வேறு காரணங்களுக்காய் தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என முடிவெடுக்கிறார்கள். அதற்கு முன் 100 நாட்கள் இனிமையான வாழ்க்கை வாழவேண்டும் என நினைத்து கிளம்புகிறார்கள்.




அந்த நூறு நாட்களும் அவர்களுக்கு வாழ்க்கையின் அழகையும், உறவுகளின் இனிமையையும், தன்னம்பிக்கையின் முகத்தையும் அறிமுகம் செய்து வைக்கிறது. அவர்கள் தற்கொலை எண்ணத்தைக் கைவிட்டு வாழ்க்கைக்கு திரும்புகிறார்கள்.

மிகவும் சுவாரஸ்யமான திரைக்கதை இயக்கத்தால் படம் வெற்றிப் படமாக தன்னை நிலை நிறுத்திக் கொண்டது. சிறந்த இயக்குனருக்கான ஃபிலிம்பேர் விருதும் கே.பாலசந்தருக்குக் கிடைத்தது.மரகதமணியின் இசையில் பாடல்கள் பெரிய வெற்றியடைந்தன.







அனைவருக்கும் இனிய தைத் திருநாள் நல்வாழ்த்துக்கள்

# அது வரை போறுப்பாய்யடா!



## ஒரே கோட்டில் ரஜினி விஜய்?

ரஜினி அரசியல் கட்சி தொடங்க போவதாக அறிவிப்பு வெளியிட்டு விட்டார். ஆனால் ரஜினி அரசியல் அறிவிப்பை விட விஜய்யின் நெய்வேலி செல்பி போட்டாதான் மிகப் பெரிய வைரலாகியுள்ளது.

இந்த சமயத்தில் விஜய் களமிறங்கினால் அரசியலில் அவர் அதிரடி காட்டுவார் என்று அவரது ரசிகர்கள் கொண்டாட்ட மூடில் உள்ளனர்.

நீண்ட நாட்களாக எதிர்பார்க்கப்பட்ட ரஜினிகாந்த்தின் அரசியல் பிரவேசம் ஒரு வழியாக அரங்கேறப் போகிறது. டிசம்பர் 31 ஆம் திகதி எல்லாவற்றையும் அறிவிப்பதாக கூறினார். ரஜினிகாந்த். உடம்பு சரியில்லை என்று காரணம் சொல்லி கொண்டிருந்த ரஜினி, திடீரென கட்சி துவங்க போவதாக அறிவித்துள்ளதன் பின்னணியில் நிர்ப்பந்தம் உள்ளதாக விசிக தலைவர் திருமாவும் கேள்வி எழுப்பி இருந்திருந்தார்.

அதற்கேற்றார்போல், அவர் ஆரம்பிக்க போகும் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளராக பாஜகவிலிருந்து வந்த அர்ஜுன மூர்த்தியை நியமிக்கவும், அந்த சந்தேகம் ஊர்ஜிதமாகியும் வருகிறது.. மற்றொரு பக்கம், இவ்வளவு காலம் அரசியல் வருகைக்காக எத்தனையோ மன்ற நிர்வாகிகள் காத்திருந்த நிலையில், இப்படி திடுதிப்பென்று ரஜினி, பாஜகவை சேர்ந்த ஒரு நபருக்கு பொறுப்பு தந்துள்ளதும் அதிர்ச்சியை தந்து வருவதாக சொல்லப்படுகிறது.

இந்த நிலையில்தான் விஜய் திடீரென வெளிச்சத்திற்கு வந்தார். அவர் தனது ரசிகர்களுடன் நெய்வேலியில் எடுத்த செல்பியானது, 2020 ஆம் ஆண்டில் அதிக அளவில் ஷேர் செய்யப்பட்ட டிவீட் என்று டிவிட்டர் இந்தியா அறிவிக்கவே அது வைரலாகி விட்டது. உண்மையில் ரஜினி கட்சி ஆரம்பிக்கப் போவதாக வந்த செய்தியை விட இந்த விஜய் செல்பி செய்தி அதிக அளவில் வைரலானது.

இதை வைத்து ரஜினிக்குப் போட்டியாக விஜய்யும் அரசியல் களத்தில் குதிப்பாரா என்ற எதிர்பார்ப்பில் அவரது ரசிகர்கள் மூழ்கி விட்டனர். கூடவே பாஜக விஜய் பக்கம் திரும்புமா என்ற பரபரப்பையும் சிலர் கிளப்பி விடுகின்றனர். இந்த சமயத்தில் விஜய்யும் அரசியலில் குதித்தால் மிகப் பெரிய அளவில் பரபரப்பாக அது மாறும் என்றும் விஜய் ரசிகர்கள் கொண்டாட்ட மூடுக்கு மாறியுள்ளனர்.

ரஜினியை வைத்து திமுகவை ஒழிப்பதுதான் பாஜகவின் முக்கிய திட்டமாக உள்ளது. அதாவது திமுகவின் வாக்குகளை பிரிக்க ரஜினி ஒரு முக்கியமான அஸ்திரமாக இருப்பார் என்பதே அமித்ஷாவின் ஆகப்பெரும் பலமாக ஆரம்பத்தில் இருந்தே உள்ளது. வெற்றிடம் உள்ளது என்று ரஜினி ஒரு பேச்சுக்கு சொல்லவும், அதையே திருப்பி போட்டு ரஜினியை தன் பக்கம் இழுக்க தொடங்கியது பாஜக.

இப்போதைக்கு ரஜினி கட்சி ஆரம்பிக்க ஓகே சொன்னாலும், அவர் தமிழகம் முழுவதும் பிரச்சாரம் செய்ய முன்வருவாரா? அப்படியே வந்தாலும் எல்லா தரப்பு மக்களின் ஓட்டுக்களும் ரஜினிக்கு கிடைக்குமா? என் பதில்தான் குழப்பம் நீடிக்கிறதாம். சில தினங்களுக்கு

**6லிருந்து 60 வரை முன்பு ரஜினிக்கு ரசிகர்கள் இருந்தனர். இப்போது அதே அளவிலான மாஸுடன் விஜய்யும் திகழ்கிறார். ரஜினிக்கு சரியான போட்டியாக விஜய்யை மட்டுமே கருத முடியும். எனவே அவர் இப்போது அரசியலுக்கு வந்தால் மிகப் பெரிய சவாலாக மற்றவர்களுக்கு விளங்குவார் என்று அவரது ரசிகர்கள் ஆசைப் படுகிறார்கள்**



முன்பு, ரஜினியின் தற்போதைய செல்வாக்கு பற்றி அமித்ஷாவுக்கு செய்தி ஒன்று போனதாம். அதில், 1996ல் ரஜினிக்கு இருந்த செல்வாக்கு, இப்போதுள்ள அரசியல் களத்தில் ரஜினி ஏற்படுத்திய தாக்கம் குறித்தெல்லாம் தெரிவிக்கப்பட்டதாம்.

அதனடிப்படையில், ரஜினிக்கு மக்கள் ஆதரவு எதிர்பார்த்த அளவு இல்லை என்றும் கூறப்பட்டுள்ளது.. ரஜினி அரசியலுக்கு வரவேண்டும் என்று, அரசியல் கட்சிகளும் அவ்வளவாக ஆர்வம் காட்டவில்லை என்றும், அரசியலுக்கு வர சொல்லி அழைத்து கொண்டிருப்பது அவரது ரசிகர்கள் மட்டுமே என்றும் சொல்லப்பட்டதாம்.. அதுவும் ஏராளமான ரசிகர்கள் இல்லை.. ஓரளவுக்குதான் போயஸ் கார்டன் முன்புகூடி முழக்கமிட்டு வந்ததையும் அந்த ரிப்போர்ட்டில் குறிப்பிட்டுள்ளனர்.


இப்போது யோசனை என்னவென்றால், ரஜினி ரசிகர்கள் பெரும்பாலும் நடுத்தர வயதை கடந்தவர்கள்... அதனால் பிரச்சாரம் செய்தாலும், அது எடுபடுமா? என்பதும் சந்தேகமாக உள்ளது. இந்த நிலையில் ரஜினியால் செய்ய முடியாததை விஜய் களத்திற்கு வந்தால் நிச்சயம் செய்ய முடியும் என்று அவரது ரசிகர்கள் நம்புகிறார்கள். சினிமாவை பொறுத்தவரை, ரஜினி படங்களை விட விஜய் படங்களுக்கே மவுசும், வசூலும் அதிகமாக உள்ளது.. மக்களிடம் பிரபலமான நபராக விஜய் திகழ்கிறார்... இது வரை எந்த சர்ச்சைகள், வம்பிலும் சிக்காமல் உள்ளார்... இதெல்லாம் தங்களுக்கு சாதகமானதாக விஜய் ரசிகர்கள் கருதுகிறார்கள்.

6லிருந்து 60 வரை முன்பு ரஜினிக்கு ரசிகர்கள் இருந்தனர். இப்போது அதே அளவிலான மாஸடன் விஜய்யும் திகழ்கிறார். ரஜினிக்கு சரியான போட்டியாக விஜய்யை மட்டுமே கருத முடியும். எனவே அவர் இப்போது அரசியலுக்கு வந்தால் மிகப் பெரிய சவாலாக மற்றவர்களுக்கு விளங்குவார் என்று அவரது ரசிகர்கள் ஆசைப்படுகிறார்கள். ஆனால், விஜய் ஆரம்பத்தில் இருந்தே உஷாராக இருந்து வருகிறார்.. குறிப்பாக, தன் வீட்டில் ரெய்டு நடந்த போதும் எந்தவிதமான காழ்ப்புணர்ச்சி, அதிருப்தி மத்திய அரசு மீது காட்டவே இல்லை.. தவறாக ஒரு வார்த்தையும் விமர்சிக்கவில்லை.

எதிர்க்கட்சிகள் கூட விஜய்க்காக வரிந்து கட்டிக்கொண்டு ஆவேசத்துடன் கண்டனம் தெரிவித்ததே தவிர,



விஜய் வாயே திறக்காமல் அமைதி காத்தார்... மாறாக ஒரே ஒரு செல்பியை எடுத்து ட்விட்டரில் போட்டு, தெறிக்க விட்டார். அந்த செல்பிதான் தற்போது மாஸாக வைரலாகியுள்ளது. தான் அரசியலுக்கு ஒரு நாள் நிச்சயம் வருவேன் என்று விஜய் ஏற்கனவே சொல்லியுள்ளார். ஒரு நாள் என்றுதானே சொன்னார்! அந்த ஒரு நாள் இன்று என்று சொல்லவில்லையே! மீண்டும் ஒரு வெற்றிடம் வரலாம். அது வரை பொறுப்பாய்யடா என ஒரு பாடலும் வரலாம்.




# "அண்ணாத்த" ரஜினியின் இறுதிப்படமா?

பல வருடங்களாக கன்னித்தீவு போல இழுத்துக் கொண்டிருந்த ரஜினியின் அரசியல் வருகை இப்போது உறுதியாகியுள்ளது. ஜனவரி மாதம் கட்சி ஆரம்பித்து சட்டசபை தேர்தலில் போட்டியிடுவது உறுதி என்றும் ரஜினி அறிவித்துள்ளார். மேலும் இது குறித்து பேசிய அவர் 'அண்ணாத்த' படத்தை முடித்துக் கொடுக்க வேண்டியது தனது கடமை எனவும் கூறியுள்ளார்.

இதனால் அண்ணாத்த படம்தான் அவரின் கடைசி படமாக இருக்கும் என சொல்லப்படுகிறது. ரஜினிகாந்தின் வயது மற்றும் உடல்நிலை காரணமாக அரசியல் மற்றும் சினிமா என இரட்டைக் குதிரையில் அவரால் பயணிக்க முடியாது என்பதால் அவர் சினிமாவுக்கு முழுக்கு போட்டுவிடலாம் என்ற முடிவில் உள்ளதாகவும் சொல்லப்படுகிறது.

# இலங்கை தமிழராக விஜய் சேதுபதி




மக்கள் செல்வன் விஜய் சேதுபதி நடித்த மாஸ்டர் உள்பட 6 திரைப்படங்கள் தற்போது வெளியாக தயாராக உள்ளன .

இந்த நிலையில் விஜய் சேதுபதி நடித்து வந்த யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற திரைப்படத்தின் படப்பிடிப்பு கடந்த மாதம் முடிவடைந்தது.இந்நிலையில் இந்த படத்தில் விஜய் சேதுபதி இலங்கை தமிழராக நடித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அங்கிருந்து வெளிநாட்டுக்கு செல்லும் அவர் இசையமைப்பாளராக எப்படி மாறுகிறார் என்பதே கதையாம். விஜய் சேதுபதி ஜோடியாக மேகாஆகாஷ் நடிக்கும் இந்த படத்தில் இயக்குனர்கள் மோகன் ராஜா மற்றும் மகிழ்திருமேனி ஆகியோர் முக்கிய வேடத்தில் நடித்துள்ளனர்.

நிவாஸ் கே பிரசன்னா இசையில் வெற்றிவேல் மகேந்திரன் ஒளிப்பதிவில் இந்த படம் உருவாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.




# ஜனவரி 1 மாஸ்டர் டிரெய்லர்

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய், விஜய் சேதுபதி இணைந்து நடிக்கும் திரைப்படம் மாஸ்டர். இந்த படத்தில் மாளவிகா மோகன், ஆண்ட்ரியா, அர்ஜுன் தாஸ் உட்பட ஏராளமானோர் நடித்துள்ளனர். அனிருத் இசையமைத்துள்ளார்.

செவன் ஸ்க்ரீன் லலித் வெளியிடுகிறார். மாஸ்டர் படத்தின் டீசர் கடந்த தீபாவளி அன்று வெளியாகி 4.3 கோடி பார்வையாளர்களுடன் தொடர்ந்து வைரலாகி வருகிறது.

இந்நிலையில் மாஸ்டர் படத்தின் டிரெய்லரை வரும் ஜனவரி 1ஆம் திகதி அதிகாலை ஒரு மணிக்கு படக்குழுவினர் வெளியிடப் போவதாக ஒரு தகவல் வெளியாகி உள்ளது.

படத்தின் டீசர் சில மணி நேரங்களில் கோடிக்கணக்கானோர் பார்த்து வைரலான நிலையில், தற்போது டிரெய்லருக்கு விஜயின் ரசிகர்கள் மிகுந்த ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

# சில்க் சுமிதாவின் "அவள் அப்படித்தான்"

நடிகை சில்க் சுமிதாவின் வாழ்க்கை வரலாறு படமாக உருவாக இருக்கிறது.

அப்படத்திற்கு 'அவள் அப்படித்தான்' என்று தலைப்பு வைக்கப்பட்டுள்ளது.

'கண்ணா லட்டு தின்ன ஆசையா' படத்தை இயக்கிய மணிகண்டன், அப்படத்தை இயக்குகிறார். தெலுங்கு நடிகை அனுசுயா பரத்வாஜ் இந்த படத்தில் சில்க் சுமிதா கதாபாத்திரத்தில் நடிக்க இருப்பது உறுதியாகி உள்ளது.

சில்க் சுமிதாவின் வாழ்க்கை கதை ஏற்கனவே பொலிவுட்டில் 'டேர்ட்டி பிக்சர்' என்ற பெயரில் படமாக்கப்பட்டது. இதில் வித்யா பாலன் சில்க் சுமிதாவாக நடித்திருந்தார். இப்படத்திற்காக அவருக்கு சிறந்த நடிகைக்கான தேசிய விருதும் கிடைத்தது.


























அனைவருக்கும் இனிய தைத் திருநாள் நல்வாழ்த்துக்கள்